www.tamilarangam.net

# உயிர்மெய்


பெண்கள் காலாண்டிதழ்




UYIRMEI, P.Boks-2114, 6028 Ålesund, NORWAY

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சாவைப்பற்றிய பயம்-
வாழ்வைப்பற்றிய பயம்
இவை இரண்டையுமே
துணிச்சலுடன்
விரட்டிச் செல்வது
அல்லது
புறக்கணித்துச் செல்வது
அதுவே நமது விளையாட்டு,
அதுவே நமது கலை
வாழ்வு எல்லாம்.

-கலைச்செல்வன்-

www.tamilarangam.net

உயிர்மெய்

இதழ் -1
தை - பங்குனி 2006

தொகுப்பாசிரியர்கள்:
பானுபாரதி
தமயந்தி

வருடசந்தா
நோர்வே, 200குரோணர்கள்
ஏனைய நாடுகள், 20யூரோ
வங்கி கணக்கிலக்கம்:
0539 4365272 Postbank

தொடர்புகளுக்கு:
UYIRMEI
P.Boks-2114
6028 Ålesund
NORWAY

E-Mail:
editor.uyirmei@hotmail.com

அகத்தே.....

உயிர்மெய் ........ 02
பானுபாரதி

மார்ச் 8. ........ 03
தமயந்தி

கொலைப்பட்டியலின் முதலிடத்தில் ........ 04
ஆர்த்தி

சிறகு ........ 06
சாரங்கா தயாநந்தன்

நோர்வே தகவல்கள் ........ 09
சகி

எனது எனச் சொல்லப்படுகின்ற........ 10
சாரங்கா தயாநந்தன்

வடதுருவப் பெண்கவி இங்கர் ஹாகருப் ........ 11
சியாமளா

இங்கர் ஹாகருப் கவிதைகள் ........ 12
சியாமளா

உள்நாட்டு யுத்தம், வறுமை, பெண்கள் ........ 14
சமுத்திரன்

200 ஆண்டுகளில் நோர்வே பெண்கள் இயக்கம் ........ 22
*Aud Farstad* (தமிழில் பானுபாரதி)

பூட்டிய கதவினுள்ளே... ........ 27
பானுபாரதி

விடை பெறக் காத்திருக்கிறேன் ........ 30
தோழர் புஸ்பராஜா

பழி சுமந்த மண் ........ 33
தோழர் புஸ்பராஜா

துன்பம் நேர்கையில் ........ 34
கவிதா

பாதுகாப்பற்ற கருக்கலைப்புக்கள் ........ 36
சகி

சிறுசோடிப் பாதங்களுக்கு ஒரு சலங்கை ........ 38
சாரங்கா தயாநந்தன்

தாலி கட்டாத தாமரை ........ 39
திலகபாமா

உண்மைகள் ........ 40
ஆர்த்தி

ஒளியோவியம் ........ 41
இலக்கியா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உயிர்மெய்

மார்ச்8. 2006

21ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நிற்கிறோம். வானளாவி உயர்ந்துகொண்டே செல்லும் தொழில்நுட்பம் எங்களது பல வேலைகளைச் சுலபமாக்கிச் செல்கின்றது. பரந்து விரிந்த இந்த பூமிப் பந்தினை உள்ளங்கைகளில் ஏந்தியதான களிப்பில் மனிதகுலம் திளைக்கிறது. கால மாற்றத்தின் சுழற்சியில் மாறுதல்களை அங்கீகரித்துக்கொண்டு அலட்சியமாய் முன்னேறுகின்ற மனிதர்கள்.

இந்த நிலையில் மாறுதல்களை எட்டாது சமூக, சம்பிரதாயக் கட்டுக்குள் சிக்கித் தவிக்கும் மனித குலத்தின் சரிபாதியான பெண்களினது நிலைமை இன்னமும் மாற்றமடையாமல் இருப்பதை இந்த 84வது சர்வதேசப் பெண்கள் தினத்தில் வருத்தத்துடன் ஒத்துக்கொள்ள வேண்டிய நிலையிலேயே நாங்கள் இருக்கின்றோம். இன, மொழி, மத வேறுபாடுகளுக்கப்பால், பெண் என்ற வகையில் எதிர்கொள்ளும் பிரச்சனைகளும் ஒடுக்குமுறைகளும் உலகின் எல்லாப் பகுதிகளிலும் ஒன்றாகவே இருக்கின்றன.

சம உரிமைச் சட்டங்களையும், பெண்ணொடுக்கு முறைகளுக்கெதிரான சட்டங்களையும் கொண்டுள்ள ஐரோப்பிய நாடுகளிற்கூட பெண்கள் மீதான வன்முறைகள், உளவியல் ரீதியான சித்திரவதைகள் அதிகரித்தவண்ணமே காணப்படுகின்றன. தனது துணைவனால், காதலனால் வன்முறைகளுக்குள்ளாக்கப்பட்டு காப்பகங்களில் தஞ்சம் புகும் பெண்களின் தொகையும் அதிகரித்தக்கொண்டேதான் இருக்கின்றது. தாங்கள் வாழ்ந்த சுற்றம் சூழலை விட்டு குழந்தைகளுடன் இடம் பெயர்ந்து, தொலைவிலும், தனிமையிலும், வேறு அடையாளங்களுடனும் வாழப் பெண்கள் நிர்ப்பந்திக்கப் படுகின்றனர். இத்தகைய நிலைமைகள் அவர்களை உடல், உள ரீதியில் பலவீனமானவர்களாக ஆக்கிவிடுகின்றது.

இவ்வாறான நிலைகள் "பெண்ணுரிமைக்கான போர்" இன்னமும் முடிவடைந்து விடவில்லை என்பதையே பறைசாற்றி நிற்கின்றது. காலங்காலமாய்ப் போராட்டங்கள் தொடாந்தாலும் ஏன் இந்த நிலைமைகள் மாறுதலுக்குள்ளாகவில்லை என்ற கேள்விக்கு விடை தேடவேண்டியவர்களாகவே இருக்கின்றோம்.

பெண்ணுரிமைக்கான போர் சமூக விடுதலையுடன்கூடிய போராட்டமாகும். இங்கே ஆண், பெண் இருபாலாரும் இணைந்தே இந்தப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும். அப்போதுதான் முழுமையான பெண்விடுதலை சாத்தியமாகும். சமூகத்தின் ஒரு அங்கமான பெண்களைக் கீழான நிலையில் வைத்துக்கொண்டு சமூக விடுதலை பற்றியும், பெண் விடுதலை பற்றியும் அலட்டிக்கொள்வது எவ்வகையிலும் சரியானதல்ல.

இத்தகைய நிலைமைகளோடு, சூழ்நிலையின் கைதிகளாக தங்களது ஆளுமையை இழந்து, அடையாளத்தையும் தொலைத்துவிட்டு வீட்டின் மூலைக்குள் முடங்கிக் கிடக்கும் பெண்களின் கரங்களை எட்டிப் பற்றுவதும் உயிர்மெயின் நோக்கங்களில் ஒன்றாகின்றது.

தோழமையுடன்
பானுபாரதி, தமயந்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





படம்: தமயந்தி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கொலைப்பட்டியலின் முதலிடத்தில் *Ayaan Hirsi Ali*

-ஆர்த்தி-



சோமாலியாவைச் சேர்ந்த 37 வயதான Ayaan hirsi Ali இஸ்லாமிய அடிப்படை வாதிகளினால் மரண தண்டனை விதிக்கப்பட்டோரின் பட்டியலில் முதலிடத்தில் இருக்கின்றாள்.

1992ல் கனடாவிலுள்ள தனது மைத்துனர்க்கு கட்டாயத் திருமணம் செய்து வைக்கப்பட்டு, அயானது எதிர்ப்புணர்வு காரணமாக இருவரும் பிரிந்து கொண்டனர். தனது கணவனைச் சந்திக்க கனடா செல்லும் வழியில் நெதர்லாந்திற்கு தப்பியோடி அங்கே அரசியல் தஞ்சம் பெற்றுக்கொண்ட அயான், 2001இல் நெதர்லாந்தின் தொழிற்கட்சியில் இணைந்து பணி பரிந்தாள். இவளது கடுமையான அறிக்கைகள், விமர்சனங்கள் மூலமாக தொடர்புசாதனங்களில் முதன்மைப் படுத்தப் பட்டாள்.

2002இல் இருந்து இன்றுவரை மெய்ப்பாதுகாவலோடு வாழ்கின்ற அயானுக்கு அவளது குடும்பத்தினருடனான அனைத்துத் தொடர்புகளும் துண்டிக்கப் பட்டு விட்டன. நெதர்லாந்தின் ஜனநாயகத்திற்கும் விடுதலைக்குமான மக்கள் கட்சியில் இணைந்து பணியாற்றிய அயான், இன்று ஆட்சியை ஏற்றுள்ள அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராக அங்கம் வகித்து வருகின்றாள்.

2004 நவம்பர் மாதம், நெதர்லாந்த் திரைப்பட இயக்குநரான Theo Van Gogh வேலைக்குச் செல்லும் வழியில் ஆம்ஸ்ரர்டாமில் வைத்துக் கொலை செய்யப் பட்டார். அவரது உடலில் பொலிசாரினால் கண்டெடுக்கப்பட்ட ஐந்துபக்கக் கடிதத்தில் 'அடுத்த பலி அயான்' என்று எழுதப்பட்டிருந்தது. பின்னர் இந்தக் கொலையைச் செய்த மொஹமட் என்பவன் கைது செய்யப்பட்டு ஆயுள் தண்டனை விதிக்கப் பட்டான்.

17நிமிடங்கள் கொண்ட விவரணப் படமான 'Submission' ஐ Theo Van Gogh, அயான் இருவரும் இணைந்து தயாரித்திருந்தனர். இதில் இஸ்லாமியப் பெண்கள் மீதான வன்முறை காட்டப்படுகின்றது. அரை நிர்வாண நிலையில் பெண்ணின் முதுகில் எழுதப்பட்டிருக்கும் குர்-ஆனில் வரிகள்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் மதத்தின் பெயரால் எவ்வாறு நியாயப் படுத்
படுகின்றது என்பதை விளக்குகிறது.

பயத்தின் விளைவாக அத்துமீறலை விமர்சிக்கத் தயங்குவதுதான் உண்மையான துவஷ
மாகும் என்பதே அயானுடைய வாதமாகும்.

கிறிஸ்தவமும், யூதமும் பலநூறு வருடங்களாக மொழிபெயர்க்கப்பட்டு விமர்சனங்களினூட
வளர்ச்சியடைந்த மதங்களாகும். இஸ்லாமிய மதச் சட்ட திட்டங்களை எவரும் விமர்சிக்க
அனுமதியில்லை. இந்தச் சட்டதிட்டங்கள் பழைய அரபுக் கலாச்சார வம்சமொன்றின்
அடிப்படையைக் கொண்டது. நாங்கள் கேள்வி கேட்கத் துணிய வேண்டும். முகமட்
தவறுகள் செய்ய முடியாதவர் அல்ல என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

'நானொரு முஸ்லிமாகவே வளர்க்கப்பட்டேன். நானென்ன சொல்ல விரும்புகிறேனோ
அதைச் சொல்ல என்னால் முடிய வேண்டும். முகமட் எனது கடந்த கால வாழ்க்கையில்
முக்கியமான ஒருவராக இருந்தவர். அவரைப் பரீட்சித்துப் பார்க்கவும், அவருடைய
கற்பித்தல் முறையைப் புதிய கோணத்தில் ஆராய்ந்து கொள்ளவும் நான் முற்பட்டேன். ஒ




சிந்தனையுள்ள மனுவாக என்னால் அங்கீகரிக்க முடியாத பல விடையங்களை அப்போது
தெரிந்துகொண்டேன்' என்கிறாள் அயான்.

2004இல் மனித உரிமைகள் சேவை நிலையம் (HRS) அயான் ஹிர்ஸி ஆலியை அந்த
வருடத்தைய 'ஐரோப்பிய மணி கட்டிய பசு' என்ற விருதினை வழங்கிக் கவுரவித்துள்ளது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை

# சிறகு

சாரங்கா தயாநந்தன் Cambidge

வெண்மை என்றால்அப்படி ஒரு வெண்மை. மென்மினுக்கத் தூய்மை. உயிர்த்துடிப்பான கண்கள். ார்ப்பவர் கண்களை வலிந்து சிறைப்பிடிக்கத்தக்க அழகு. மெல்ல மெல்லத் தத்தி நடக்கும்போது அப்படியே கைகளில் அணைத்தெடுத்து தூக்கி மடிமீது வைத்துக் கொள்ளத் தான்றும் எவருக்கும். அவனுக்குப் பார்க்கப் பார்க்க சந்தோஷ ாக இருந்தது. வீட்டுக்கு எவர் வந்தாலும் அவர் கவனம் திருப்பி ஒருமுறை தன்னைப்பற்றிக் கதைக்க வைக்காமல் விடாது அந்த வெள்ளைப்புறா.

கூடென்று ஏதுமில்லை. வீட்டினுள் பலகாலம் வசித்து வருவதில் தனது வாழ்விடம் அதுவென்று அதற்குப் படினப் டுத்தப் பட்டிருக்க வேண்டும். அவ்வகையில் அது முட்டாள்த் னமுடையதாக இருப்பினும்கூட சில பொழுதுகளில் இந்தப் றாவே உலகிலுள்ள சகல புறாக்களிலும் அதி புத்திசாலியெனத் தான்றும் அவனுக்கு. அதன் சில செயல்களைப் பார்க்கும்போது ப்படி இத்தனூண்டு சின்னப் றவைக்குள் இத்தனை அறிவு ந்ததோ என்று வியப்பான். ருவேளை அவ்வெண்ணம் காக்கைப் பொன்குஞ்சோ' ன்னமோ...?



ந்தப்புறா அவனுக்குக் டைத்த விதம் இப்போதும் அவனது நெஞ்சில் நிற்கிறது. ாடகைக்கிருந்த பக்கத்து வீட்டுக்காரர் வறு வீடு மாறிப் போகும்போது விற்கமுடியாத தேங்கிப்போன பாருட்களாக நல்ல தமிழ் இலக்கண நூல்களும், ஒரு றாக்கூண்டும் அவரிடம் மிஞ்சியிருந்தன. அவற்றை அவனிடம் அவர் கொடுத்தார் என்பதற்காக அவன் புறாவை வாங்கவில்லை. றாவானது அவனது குடும்பத்தில் நிம்மதியைத் தீர்மானிக்கும் ாரணிகளில் ஒன்றாய்ப் போய் விட்டதனால் அவன் அதை ாங்கினான்.

க்கத்து வீட்டுக்காரர் தன் தனிமை போக்க ஒரு புறாவை ளர்த்து வந்தார். கறுப்பும் வெள்ளையுமான அந்தப் புறாவில் சால்லமுடியாத பிரியம் அவருக்கு. புறாவும் கூட்டினுள் அப்பாவித் தனமாய்த் தன் முகத்தை வைத்துக்கொண்டு அவர் கொடுக்கும் உணவுகளை உண்டுவிட்டு, அல்லது உண்பதாகப் பாவனை பண்ணிவிட்டு வாழ்ந்து வந்தது. பெரும்பாலான மென் மாலைப் பொழுதுகளில் அவர் அதனைத் திறந்து விடுவார். திறந்துவிடும் பொழுதுகளில் தோட்டத்துக் கதிரையிலிருந்து புத்தகம் படித்தபடி, புறாவிலும் ஒரு கண் வைத்தபடி இருப்பார். புறா அவரது காலடியிலிருந்து ஏதாவது தானியத்தைப் பொறுக்கி உண்டபடி இருக்கும். அவர் அந்தப் புத்தகத்தை மூடி எழும்பப் புறா தானாகவே போய்க் கூட்டருகே நிற்கும். அதைக் காணும் போதெல்லாம் தானாகவே சிறைப்பட விரும்பும் பறவைகளும் உலகில் வசிப்பதை எண்ணி அவனுக்கு வியப்பாக இருக்கும். பறக்கும் நோக்கமற்ற சிறகுகளைக் கொண்ட அந்தப் புறா பின்னேரப் பொழுதுகளில் குழந்தை ரம்யாவின் குறும்புகளைக் குறைக்கப் பெரிதும் உதவியாக இருந்தது.

சில நாட்களின் பிறகு ஒரு நாள் அந்தப் புறாவின் நளினமாகக் கொத்தியுண்ணும் நாடகம் தோட்டத்தில் அரங்கேறவில்லை. அவன் வியப்போடு மதிலெட்டி விசாரித்தபோது அந்தப்புறா அவரிடம் மிகுந்த வசவுகளை வாங்கிக் கட்ட வேண்டியிருந்தது. அதன் உடல் மனம் சகலமும் அலசிய அந்த வசவுகளின் முடிவில், ஒரு தரக்குறைவான புறாவுடன் அது பறந்து போய் விட்டதாக அவர் சொன்னார். அத்துடன் பெண்களையும் புறாக்களையும் நம்பக் கூடாது என்று அவனுக்கு இலவ ஆலோசனையும் வழங்கினார். அது அவரது வழக்கம்தான். பெண்களின் சகவாசமேயற்று 'பிரம்மச்சாரியாக' வாழ்ந்து வருகின்ற அவர் இல்லற வாதிகளையும்விட அதிகமாகப் பெண்களையும், அவர்களின் உணர்வுகளையும், நடையுடை பாவனைகளையும் விமர்சித்து வருவது பற்றி அவனுக்கு ஆச்சரியமாக இருக்கும். இல்லறவாதிகளின் நடப்பியல் வாழ்வின் மீது இரகசியமாய் அவர் கொண்டுள்ள ஈர்ப்புத்தான் அவரது உணர்வுகள் முழுவதையும் பெண்களின் உலகம் மீது குவியப் படுத்தி எந்நேரமும் அவர்களை 'அலச' வைக்கிறதோ என நினைத்தாலும் அதனை நேரடியாக கேட்டுவிடாத சமூகத்தில் ஒருவனாகவே அவனும் இருந்தான். பல வருடங்களாக மனங் கலந்திருந்து, இதய அன்பின் சுவை பிழிந்து மணம் முடித்த அவனே மனைவி என்ற பெண் மூலமாய் அறிந்து கொள்ள முடியாதிருக்கும் அவர்களின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உடலியல் ஆசை பற்றிய உள்மனக் கொதிப்புக்களை அவர் தன் மனக் கண்ணில் கண்டு அதைப் பிறருடன் பகிர்ந்து கொள்வதென்பது சாதாரண விடயமல்லத்தான். எப்படித்தான் இது அவருக்கு முடிகிறதோ? எது எப்படி இருந்தாலென்ன, அது அவனுக்குத் தேவையுமில்லை. குழந்தைக்குப் 'புறாக் காட்டப்போகும்' பொழுதுகளில் அவரது 'பெண்களின் உலகு பற்றிய ஆராய்ச்சிகளை' கேட்கும் சகிப்புத் தன்மை மட்டும் இருந்தால் போதும்.

சுதந்திர வாழ்வின்பால் ஈர்க்கப்பட்டுத் துணையோடு பறந்தோடி விட்ட அந்தப் புறாவின் நியாயங்களை அயல் வீட்டுக்காரர் புரிந்து கொள்ளாது இருந்தது போலவே ரம்யாக் குட்டியும் புரிந்து கொள்ளவில்லை. 'புறாப் பார்க்கப் போவோம்' என்று அவள் பிடிக்கும் பிடிவாதம் வேறு எந்தப் போக்குக் காட்டலிலும் மறைந்து போகாதபடி இருந்தது. அந்தப் புறா பறந்துபோய் விட்டதாகச் சொல்லி குழந்தையின் மேலதிக விளக்கத்திற்காகத் தூரப் பறந்து பார்வையிலிருந்து விலகும் ஒரு காகத்தைக் காட்டினான் அவன். அந்தப் பொழுதுக்கு குழந்தை அமைதியானாலும், மறுநாள் வீட்டு முற்றத்தில் அமர்ந்திருந்த காகத்தைக் காட்டி அதுபோல புறா எப்போது திரும்பி வரும் என்று பிடிவாதம் பிடிக்கத் தொடங்கி விட்டாள். வேறொரு புறா வாங்கித் தருவதாக பேரம் பேசிக் குழந்தையுடன் சமாதானம் ஆகியாயிற்று. ஆனால் பிறகு தினமும் இவன் அலுவலகம் விட்டுப் போகும்போது எதிர்பார்ப்பைத் தேக்கி ஏமாந்து போகத் தொடங்கினாள் குழந்தை. அது அவனது நிம்மதியைக் குலைத்தது. அது போதாதென்று அவன் அதைப் புரிந்து கொள்ளவேயில்லை என்று மனைவியும் குற்றம் சாட்டத் தொடங்கிவிட்டாள். அலுவலகத்தால் களைத்து வருபவனை வார்த்தைகளால் உலுக்கினாள். 'ரம்யாக் குட்டி எங்கை?' கேட்படி வருவது அவன் இயல்பு.

'ரம்யாவும்.... குட்டியும்.... பெரிய பாசம்தான்....'
'என்னப்பா... என்ன சொல்லுறீர்....?'

'என்ன சொல்லுறது....? என்ரை பிள்ளை எந்தநாளும் புறா வருமெண்டு நினைச்சு ஏமாந்து போகுது...'

பெண்கள்தான் எவ்வளவு வேகமாகப் பிள்ளைகளை முற்றும் தமது உரிமையாக்கி விடுகிறார்கள். அவனும் முயற்சிக்காமல் இல்லை. ஆனால் குழந்தையின் ஏமாற்றத்தின் முன்பாக அவனது எந்த நடைமுறைப் பிரச்சனைகளையும் பொருட்படுத்த மனைவி தயாராக இல்லை.

'கொஞ்ச நேரம் சிலவழிச்சுப் பிள்ளையின்ரை சிரிச்ச முகத்தைப் பார்க்க விருப்பம் இல்லை...'
அவனது 'தந்தைமை'யைத் தாக்கும் அவளது வார்த்தைகளில் நிறையவே காயப் பட்டுப் போனான். தொடர்ந்து வந்த சனிக்கிழமையில் புறா வாங்கியே விடுவதென்ற தீர்மானத்தே ஊரின் ஒதுக்குப் பக்கமாயிருந்த கொலனிப்பக்கம் போனா சேரிக்குடிகளின் பிள்ளைகள் கூட்டமாய் விளையா கொண்டிருந்தார்கள். இவனது சிவப்பு நிற மோட்டார் சைக்கி உறுமல் ஒலியில் இலகுவாய்க் கவனம் திரும்பி, இ மோட்டார் சைக்கிளை நிறுத்தியதும் ஓடி வந்து குழுமினார்க இடுப்பில் நிற்காத காற்சட்டையைக் கைகளால் பிடித்த ஓடிவந்த அவர்களைப் பார்த்து அவன் மனம் பரிதாபப் பட்ட

“தம்பியவை... இஞ்சை புறா ஒண்டு வாங்கலாமோ...?”

“என்னவாமெடா...?”
சற்றே பெரிய பையன் ஒருவன் கூட்டத்திலிருந்து வெளிப்ப முன்னால் வந்தான்.

“ஒரு புறா தேவைப்படுது தம்பி...”

“என்னமாதிரிப் புறா அண்ணே...”
பையன் இயல்பாய் உறவு கொண்டாடினான்.

“வெள்ளைப் புறா எண்டால் நல்லது. என்ன விலையெண்டா பறவாயில்லை...”

“கொஞ்சம் நில்லுங்கோண்ணை...”
பையன் காற்றாய்ப் பறந்தான். திரும்பி வந்தபோது அவ கையில் தேமேயென்று உட்கார்ந்திருந்தது வெள்ளைப் பு ஆனால் கூர்ந்து பார்த்தால் புறாவின் கால்களில் ஒன்றை பை தன் விரலிடுக்கில் கொடுத்திருந்தது தெரியும். சில புறாக்க நிலை அப்படித்தான். வெளியே தெரியாமல் நுட்பமாய்ச் சின படுத்தப் பட்டிருக்கும். புறாவை நிலத்தில் விட்டான்.

“அண்ணைக்கு வணக்கம் சொல்லு...”
பையனின் வார்த்தைக்குப் புறா தன் மூக்கு நிலத்தில் ட பணிந்து முதுகுப்புற வெண் சிறகை இரு பக்கமும் பரத்திய பையன் சொன்ன விலையைச் சந்தோஷமாகக் கொடுத்தான்

“ஒற்றைப்புறா போதுமே அண்ணை” பேரம் பேசாத, விலை வாக்குவாதப் படாத நல்ல மனிதனைக் கண்டுகொ சந்தோஷத்தில் பையன் மெய்க் கரிசனத்தோடு கேட்டான்.

“மகள் விளையாடத்தானே... போதும்...”

“சோடிப்புறா தேடிவரச் சொல்லி 'புறா எறியிற' வேலை வச் தேங்கோண்ணை.....”
இவன் மோட்டார்சைக்கிள் உதைக்கவும் பையன் சொன்னா

புறா வளர்க்கும் பையன்களிடம் இருக்கும் 'புறா எறி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ழக்கம்' அவனுக்கும் தெரியும். ஒரு புறாவை நன்றாகப் பழக்கப் டுத்திய பிறகு தனிப் புறாவாய் உயர எறிந்து விடுவார்கள். அது பறந்துபோய் 'இணை'யோடு மீண்டு வரும். ஏதோ ஒரு இடத்திலான இழப்பு எறிந்தவர்களின் வரவாய்ப் போய்விடும்.

இவன் திருப்பிக் கேட்டான் "ஏன் தம்பி..."

பையன் தன் கூட்டத்தவரைப் பார்த்து ஒருமாதிரிச் சிரித்தான்.

அதுக்கு உள்ச்சிறகு ஒண்டுமில்லையண்ணை....எல்லாம் வெட்டி விட்டிட்டன்...."

முன்புறக் கூடைக்குள்ளிருந்த புறாவின் முதுகுப்புறச் சிறகிரண்டும் விரித்தான். உள்ளே சிறகு கத்தரிக்கப்பட்டிருந்த புறாவின் உடம்பு வெறும்தோலாய்த் தெரிந்தது.

எறிஞ்சால் பிடரியடிபட விழுந்திடும் அண்ணை..."

வரதட்சணையின் பின்னும் மகனில் உரிமை கொள்ளும் பற்றுவராய்ப் பையன் புறாவை விற்றபிறகும் கவனம் சொன்னான்.

நான் அப்படிச் செய்யமாட்டன் தம்பி....."

இடைக்கிடை பார்த்துக் கத்தரிச்சு விடுங்கோ அண்ணை... லவேளை பறந்துபோகவும் பார்க்கும்.."
பையனின் குரல் அவனது மோட்டார் சைக்கிளைத் துரத்தியது.

ம்யாக் குட்டிக்கு கரை காணமுடியாத சந்தோஷ . மனைவிக்கும்தான். அவள் தான் சொன்ன வார்த்தைகளையெல்லாம் மறந்து போனதுபோல நடந்து கொண்டாள். வழமையான 'புருஷ இலக்கணத்துக்கமைய' அவனும் அதைக் கிளற விரும்பவில்லை. புறா வந்த பொழுதிலேயே வணக்கம் சொல்லும் வித்தையால் சகலரையும் கவர்ந்து விட்டது.

உடனடியாகப் புறாக்கூண்டினுள் தான் அதனை விட்டான் பறந்துவிடும் பொழுதில் புறா வீடெங்கும் தத்தித் திரிந்தது. திரும்பினாலும் அதனால் பறக்க முடியாதென்ற உண்மையை மனைவியிடம் சொல்லி பெரும்பாலான வேளைகளில் அதைத் திறந்தே விட்டான். பையன் சொன்னபடி, புறா புத்திசாலிதான். கழித்தலுக்கும், உண்பதற்கும் மட்டும் கூண்டை வைத்திருந்தது அது. ஈரத்துணி நனைத்து அதன் மேல்சிறகு ஒற்றியதில் பளீர் வெண்மையாய் ஒளிர்ந்தது. இப்போது புறா வந்து மூன்று மாதங்களாகி விட்டது. அதுவும் வீட்டின் தவிர்க்க முடியாத அங்கத்தவராய் ஆகிவிட்டது.

பலமுறை பறக்க முயன்று தோற்றதிலோ என்னமோ புறா பறப்பதற்கான எத்தனிப்பையே கைவிட்டிருந்தது. அவன் மெல்லப் புறாவைப் பிடித்துப் பார்த்தபோது அவை சற்றே வளர்ந்திருக்கக் கண்டான். ஆனால் அது பற்றிய பிரக்ஞையே புறாவுக்கு இருப்பதாய்த் தெரியவில்லை. எனினும் மனைவிக்கு விஷயம் தெரிய வந்ததிலிருந்து அவளுக்கு அதே நினைப்புத்தான். அதன் உட்சிறகைக் கத்தரித்து விடும்படி அல்லும் பகலும் சொல்லிக் கொண்டிருக்கிறாள்.

---

ரம்யாகுட்டி கட்டமிட்ட ஊஞ்சலில் இருக்க, புறா அவளின் முன்பாக நின்று தன் வெளிர்சிறகு பரத்தி விளையாட்டுக் காட்டிக் கொண்டிருந்தது. குழந்தையின் குலுங்கல் சிரிப்பில் வீடு மகிழ்ந்திருந்தது.

"என்னப்பா... உள்ச்சிறகை இண்டைக்கு வெட்டி விடுறது எண்டு நேற்றுச் சொன்னீங்கள்... வெட்டிவிடுறியளே..."
புறாவுக்குத் தானியம் தூவியபடியே கேட்டாள் மனைவி. மொழி புரியாத அப்பாவித் தனத்தோடு புறா தானுண்டும் தானியத்தில் கவனமாயிருந்தது. அந்தப் பொழுதில்தான் வெளியே அழைப்புக் கேட்டது.

"அக்கா நிக்கிறாவோ..."
மென்மையான பயந்தது மாதிரியான குரல். மாதங்கிதான். நாலாம் வீட்டுப் பிராமணப் பெண். பதினேழு வயதில் மணம் முடித்துக் கொடுத்து விட்டார்கள். புருஷன் பெரிய சிவன் கோவில் குருக்களையயா. அவரது கடைசி மகள் என்று சொன்னாலும் நம்பலாம். ஆனால் அந்தப் பொன்னிறத்திலும் பெரிய விழிகளிலும் தாயைக் கொண்டிருப்பதாகச் சேர்த்துச் சொல்ல வேண்டும். லட்சுமிநாதர் ஐயாவின் ஒன்பது பிள்ளைகளில் நடுப் பெண்ணாக, ஆறு பெண்களில் ஒருத்தியாகப் பிறந்து விட்டதால் அழகு ஒன்றே குருக்களையயா வீட்டுக்கு 'வரும் தட்சணை'யாகக் கொண்டு இத்தனை சிறிய வயதில் தாலிக் கொடியினுள் கழுத்தைப் புதைத்துக்கொண்டு விட்டிருந்தது அந்தப் பெண்.

துணிமணிக்குக் குறைச்சலில்லை. வேளாவேளைக்குச் சாப்பாடு. பிராமணப் பெண்கள் பலரும் படித்துப் பட்டம் பெற்று பெரிய பதவி வகிக்கின்ற இந்தக் காலத்திலும் அதிகாலையில் தலைக்குக் குளித்து ஈரக்கூந்தல் முடிந்தபடி முன்வாசலில் கோலம் போடுகின்ற 'தீவிர' ஆசாரம். அவ்வாறான ஒரு காலையில் இவனது பார்வையில் தற்செயலாக அந்தக்காட்சி விழுந்திருந்தது. கோலமாவைக் கையில் வைத்துக்கொண்டு பள்ளிக்குப் போகின்ற உயர்தர வகுப்பு மாணவியை ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தது இந்தப்பெண். இவன் புன்னகைத்த போதிலும் பதிலுக்குச் சிரிக்கவில்லை. ஆனால் அடிக்கடி வீட்டுக்கு வந்து கீதாவுக்காக இவன் வாங்குகின்ற மாத இதழ்களை இரவலாக வாங்கிப்போகும். வரும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொழுதுகள் பெரும்பாலும் குருக்களையய்யாவிற்குச் 'சேவகம்' செய்யத் தேவையற்ற இவன் வீட்டில் இல்லாத பொழுதுகளாக இருக்கும். மாத இதழ்களின் 'விட்டுவிடுதலையான' பெண்களைப் பார்த்துப் பெருமூச்செறியுமோ என்னமோ? ஏன் சில பெண்களின் வாழ்க்கை மட்டும் நம்பமுடியாதபடி நிகழ்வுப்பொழுதின் சற்று முன்பதான காலப்பகுதியிலேயே உறைந்து நின்று விடுகிறதோ தெரியவில்லை.

"கீதா"

உள்ளே திரும்பிக் கூப்பிட்டான். பதிலாய் வெளிப்பட்ட கீதா, மாதங்கி கொண்டு வந்திருந்த மாத இதழ்களை வாங்கி முக்காலியில் போட்டுவிட்டு அவளை உள்ளே அழைத்துக்கொண்டு போனாள். பெண்கள் இருவர் கூட்டுச் சேர்ந்து விட்டால் பொழுதுகள் பொருள் இழப்பது உண்மை எனினும் மாதங்கி விடயத்தில் அது மெய்ப்படவில்லை. கீதாவின் மற்றைய சிநேகிதிகள் 'போகமாட்டார்களோ?' என்று நினைக்கும்வரை இருந்து கதைப்பார்கள். இடையிடையே படீர்ச் சிரிப்பு வேறு. அப்படி எதைத்தான் கதைத்துத் தீர்க்கிறார்களோ? கீதாவிடம் கேட்டால் "அதெல்லாம் எங்கடை விஷயம்... உங்களுக்கெதற்கு?" என்று வெட்டுத் தெறித்தாற்போலச் சொல்லுவாள். ஆக, அவன் ஏதும் கேட்பதில்லை.

"அந்தப் புறாச் செட்டையை வெட்ட வேண்டாமப்பா..." மாதங்கி போனதும் அவனருகில் வந்து மெல்லிய குரலில் சொன்னாள் மனைவி.

"ஏன்...? ஏன் திடீரெண்டு இப்படிச் சொல்லுறீர்...?"

"அந்த மாதங்கிதான் கேட்டுது... தனக்காய் ஒரு உ
செய்வியளோ எண்டு சொல்லிப் பெரிய பீடிகை எல்ல
போட்டுப் பிறகுதான் கேட்டுது..."

"ஏனாம்...?"

"நான் கேக்கேல்லை... பிராமணக் குடும்பம்தாே
அதுதானாக்கும்..."

"சிறகு வெட்டிறது பறவைக்கு வலியில்லைத்தானே..."

"சொன்னன்... சிறகு வெட்டின பறவை செத்ததுக்குச் சரிதா
எண்டு சொல்லிச்சுது...."

அவன் எதுவும் பேசாமல் இருந்தான்.

"திருப்பித் திருப்பிக் கேட்டுதப்பா... விடுங்கோ...புறா நிக்குமட்
நிண்டிட்டுப் போகட்டும்... எனக்குப் புரியேல்லை ஏன் மாத
இதைக் கேட்டுதெண்டு..."

சொன்னபடியே கீதா சமையலறைக்குப் போனாள். ஒரு புறா
சிறகு பற்றிய புரிதல்கள் இரு பெண்களிடமும் வேறுபடும் வி
பற்றி அவனுக்குச் சிந்தியாதிருக்க முடியவில்லை. மனை
சொல்லியது போல மாதங்கிக்கு எழுத வாசிக்க மட்டுமன்
சிலவற்றைச் சிந்திக்கவும் முடியும் என்று தோன்றி
அவனுக்கு. கூடவே கீதாவுக்குப் புரியாத அந்தக் காரண
அவனுக்குப் புரிந்து போய்விட்டிருந்தது.

## நோர்வேத் தகவல்கள்

1860இல் முதலாவது பெண் ஆசிரியை (கிராமப்புறத்தில்)

1866 வியாபாரத்தில் பெண்கள் (கிராமப் புறங்களில்)

1869 மேற்குறிப்பிட்ட இரு விடையங்களும் நகர்ப்புறங்களில்

1884 பெண்கள் பல்கலைக்கழகப் பிரவேசம்

1915 பெண்களுக்கான பேறுகாலத்திற்கான 6வார ஊதியத்துடனான விடுமுறை.

1922 முதலாவது பெண் அரசியற்கட்சி அங்கத்தவர்

1927 குடும்பத்தில் பெண்கள் சமஉரிமை

1945 நாடாளுமன்றத்தில் முதல் உறுப்பினர்

1959 சம ஊதியம்

1961 முதலாவது பெண் பாதிரியார்.

1981 முதலாவது பெண் பிரதமர்

1993 முதலாவது பெண் மேற்றிராணியார்.

தகவற்திரட்டு
-சகி-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எனது எனச் சொல்லப்படுகின்ற....

எனது எனச் சொல்லப்படுகின்ற
உனது வாழ்வை வாழ
பயணப்படுகின்றேன்.

நேற்றென் தாயளைந்த
நீள்நெடுங் கூந்தல்
நானாடிய ஊஞ்சல்
என் நாவிலுலவிய மொழி
சேர்ந்தென்னோடு பாடிய குயில்
சிரிப்புக்கள் சிந்திய வெளி
சகலமும் துறந்து....
நீயென்னைப் பிடுங்கிய பின்னரும்
வேர்களில் ஒட்டியுள்ளது
என் தாய்மண்.

உலர்கையில் உதிருமோ?
வண்ணத்துப்பூச்சி இறகுகளாய்
வழியெல்லாம் உதிர்கின்றன
என் தங்கக் கனவுகள்.

பாதையெங்கணும் பரம்பியுள்ள
எவரும் கண்டிருப்பாத
அக்கனவுகள் நல்கும் ஒளியுறு எழிலை
என் இதயப்பேழையில்
இரகசியமாய்ச் சேமித்துள்ளேன்

கால உளிச் செதுக்கலோசை
காதுகளை அறைவதில்
நியதியுற்ற பயணங்களை
நிகழ்த்தியாக வேண்டியுள்ளது.

இதோ...உன் கால்தடம் பற்றி
படியும் என்பாதங்கள்
பயணத்தின் சுவடேயற்று.....

-சாரங்கா தயாநந்தன் Cambidge-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வடதுருவப் பெண்கவி

# இங்கர் ஹாகருப்

சியாமளா

அன்றைய நோர்வேஜிய ஆணாதிக்க சமூகத்தில் தெளிவும் உறுதியும் கொண்ட பெண்ணின் குரலாக ஒலித்தவர் இங்கர் ஹாகருப். நோர்வேயின் பேர்கன் நகரத்தில் 1905ல் பிறந்த இவரது எழுத்துலகப் பிரவேசம் சிறுவர் மலரில் எழுதுவதோடு ஆரம்பிக்கின்றது. அதனைத்தொடர்ந்து கவிதை எழுதுவதில் முனைப்புடன் ஈடுபடுகிறார். இவரது கவிதைகள் பத்திரிகைகள் சஞ்சிகைகளில் வெளிவரத் தொடங்கியது. தனது 20வது வயதிலிருந்து நோர்வே பொதுவுடமைக் கட்சியின் உறுப்பினராக இருந்தவர். 1939ல் இவரது முதலாவது கவிதைத்தொகுதியை வெளியிட்டார். கவிதைகள் மட்டுமல்லாது நாடகங்கள், கட்டுரைகளையும் எழுதியுள்ளார். வளர்ந்தோருக்காகவும் சிறுவர்களுக்காகவும் பாடல்களை எழுதியுள்ளார். இவரது சிறுவர் பாடல்கள் மிகவும் பிரபலமானவை. பெரும்பாலும் மரபுரீதியிலான இவரது கவிதைகள் கடினமான ஆண் பெண் நேசத்தினைப் பேசுவதாகும். “பெண்களும் காலமும்” என்ற பத்திரிகையில் பணி புரிந்தார். அத்தோடு பொதுவுடமைக் கட்சியின் “விடுதலை” என்ற பத்திரிகையிலும் விமர்சகராக இருந்து பணியாற்றினார். தனது கவிதைகளில் சமூகதத்தை விமர்சித்தும் மத உருவாக்கத்தை கண்டித்தும் எழுதினார்.

இரண்டாவது உலகப்போரின்போது நாசிகளுக்கெதிரான நடவடிக்கைகளில் பங்கெடுத்தவர். அதனால் 1943 சுவீடனில் தலைமறைவு வாழ்க்கையை மேற்கொள்ள நேர்ந்தது. இந்தக் காலகட்டங்களில் இவர் எழுதிய (அனாமதேயப் பெயர்களில்) நாசிகளுக்கெதிரான கவிதைகள் மக்களிடையே மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தின. போர்க்காலத்தில் இவர் எழுதிய பிரபல்யமான கவிதையொன்று இப்படித் தொடங்குகிறது...

*அவர்கள்*
*எங்கள் பண்ணைகளை எரித்தனர்*
*அவர்கள்*
*எங்களது ஆண்களை கொன்றனர்*
*மீண்டும் மீண்டும்*
*எங்களது இதயங்களை*
*குமுறச் செய்வோம்.*

*எங்களது இதயங்களை*
*கூரிய கோடரி கொண்டு பிளப்போம்*
*அவர்கள்*
*எங்கள் பண்ணைகளை எரித்தனர்*
*அவர்கள்*
*எங்களது ஆண்களை கொன்றனர்*
*எங்கள் ஒவ்வொருவரது மரணத்தின் பின்னால்*
*ஆயிரமாய் மீண்டும் எழுவோம்.*
........................

யுத்தம் முடிவுக்கு வந்த பின் அரசியலில் அதிக ஈடுபாடாயிருந் ஒரு சோசலிசவாதியான இவர் வன்முறையும், அதி துஷ்பிரயோகமுமற்ற, எல்லா மனிதர்களும் சமத்துவ வாழ்கின்ற உலகையே விரும்பினார். அனைத்து மக்களின நலன்களையும் பாரபட்சமின்றிப் பேணுகின்ற ஒரு சமூகத்த கட்டியெழுப்புவதில் அக்கறையுடனும், விழிப்புடனும் செயர வேண்டும் என்பதை தனது கவிதைகளில் தொடர்ச்சியாக எ வந்தார்.

இங்கர் ஹாகருப் இன்றும் நோர்வேஜிய மக்களால் எ மிக்க பெண் கவியாய், போராளியாய் மதிக்கப் படுகின்றார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இங்கர் ஹாகருப்

## கவிதைகள்

தமிழில்: சியாமளா



Inger Hagerup

## அந்தக் கவிதை நான்தான்

நான்
ஒருவராலும் எழுதப்படாத கவிதை
எப்போதும்
எரியுண்ட கடிதமும் நான்

ஒருவரும்
நடந்தறியாப் பாதை நான்
இராகமில்லாத இசையும் நான்

மொழியற்றுப்போன உதடுகளின்
வேண்டுதலும் நான்
ஒருபோதும்
பிறந்திடாத பெண்ணின்
புதல்வனும் நான்

ஒரு விலங்கு
ஒருவராலும் பூட்டப் படாதது
ஒரு சிதை
எவராலும் எரியூட்டப் படாதது

என்னை எழுப்பு
என்னை விடுதலை செய்
இந்த
ஆன்மாவிலிருந்தும், உடலிலிருந்தும்
இந்தப் பூமியிலிருந்தும்
இந்த நெருப்பிலிருந்தும்
என்னை மேலே தூக்கிவிடு

ஆனால்
நான் கேட்கின்றபோது
விடைகள் கிடைக்கவில்லை
ஒருபோதும் நிகழ முடியாத
நிகழ் நான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பொறுமையுள்ள மனுவாயிரு

அனைத்தும் மெதுவாகவே நிகழ்கிறது.
படைப்பு முடிவற்றது
இருள் ஒளியானது, ஒளி நெருப்பானது.
ஒரு நாள்,
மனிதன் விழித்தெழுந்து சொன்னான்
நான் விரும்புகிறேன்

அனைத்தும் மெதுவாகவே நிகழ்கிறது
எங்களது பூமி
மெதுவாக -ஆனால்
அறியப்படாத துறைமுகத்தை நோக்கி
பாய் வலித்துச் செல்கிறது
ஒருவராலும் எங்களது எதிர்காலத்தை
அளவிட முடியாது
அதற்குப் பெயரிடவும் முடியாது
இது
எங்களுக்குத் தெரிந்ததுதான்
இந்த
முடிவற்ற வாழ்வைப் படைப்பதில்
நாமும் இணைந்திருக்கிறோம்
படைப்பு
நன்மையானதா, கொடியதா?
எப்படியிருப்பினும்
இழப்புக்களை நாங்கள் விரும்பவில்லை
முன்பொருநாளில்
நாங்கள் பெற்ற நெருப்பை
இழக்க விரும்பிலோம்
வழிகள் பல கிளைகளாகின
அதுவே முரண்களும் ஆயின
பலம் அதிகாரமாகியது
அதிகாரம் வன்முறையாகியது
மனிதர்கள்
ஒருவரையொருவர்
காலடியில் போட்டு மிதித்தனர்
ஆனாலும்
கனவு மட்டும்
தீவிரமாக நிஜத்தை நோக்கியபடி

விரைவு......விரைவு

மீண்டும்

தவறாகப் போய்விட நேரிடும்
எங்களுக்கு என்னதான் வேண்டும்

இவை
வெறும் கனவுகளும் கற்பனைகளும்
என
அறிஞர்கள் கூறுகின்றனர்
அவர்கள் இறுகிப்போன
இதயம் படைத்தவர்கள்
இனியும்
அவர்களைச் செவிமடுக்க வேண்டாம்
வாழ்வென்பது
வீடும்,உணவும், பணமும் அல்ல
நாம்
எப்போதும்
பாதையில்
ஒரு அடி முன்னேறியபடி
எப்போதும்
மனிதத்தின் வெற்றிப் பாதையில்
அல்லது
வீழ்ச்சிப்படிகளில்.
விரைவு
இப்போது
மிக மிக விரைவு வேண்டும்.
பொறுமையுள்ள மனுவாய் இரு
உனது சுவடுகளைப் பதி

இது எங்களது
முடிவற்ற குறுகிய வாழ்க்கையைப் பற்றியது
இது எங்கள் பூமியைப் பற்றியது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உள்நாட்டு யுத்தம் வறுமை பெண்கள்




-சமுத்திரன்-

வறுமைக்கும் உள்நாட்டு யுத்தத்திற்குமிடையிலான உறவு பற்றிய விவாதங்கள் நீண்ட காலமாக தொடர்கின்றன. மூக அமைப்பு ரீதியான அசமத்தங்களின் விளைவான வறுமை காலப்போக்கில் அரசியல் போராட்டங்களுக்கும் அவை ஆயுதப் போராட்டங்களாகப் பரிணமிக்கவும் ஒரு பிரதான காரணி எனும் கருத்தை சில ஆய்வாளர்கள் காண்டுள்ளனர். மேலெழுந்தவாரியாகப் பார்க்கும் போது இது ஒரு தர்க்கரீதியான விளக்கமாகப் படலாம். டைமுறையில் வறுமைக்கும் ஆயுதப் போராட்டங்களுக்கும் இடையிலான உறவு நேரடியானதல்ல. இங்கு அணிதிரட்டல், அரசியல் மயமாக்கல் அகநிலை சார்ந்த மற்றும் ஸ்தாபன ரீதியிலான அம்சங்கள் முக்கியத்துவம் பறுகின்றன. சகிக்கமுடியாத வறுமை பரந்திருக்கும் பல சமூகங்களில் பாரிய அரசியல் அணிதிரட்டல்களோ அரசியல் போராட்டங்களோ இடம் பெறுவதைக் காணமுடியவில்லை. வறுமை - ஆயுதப் போராட்டம் பற்றிய உறவு ஒரு விவாதப் பொருளாகவும் முரண்பட்ட கருத்து ரீதியான நிலைப்பாடுகளைக் கொண்டதாகவும் ருப்பதில் ஆச்சரியமில்லை.

அதேவேளை ஆயுதப் போராட்டங்கள் இடம் பெறும் நாடுகளில் அந்த யுத்தத்தின் விளைவாக வறுமை அதிகரிப்பது பற்றி மாற்றுக் கருத்துக்களுக்கு இடமில்லாத அளவுக்கு ஆதாரங்கள் உண்டு. இத்தகைய ஆதாரத்தைத் தேடி நாம் அலையத் தேவையில்லை. நமது நாட்டின் யுத்த களமாக மாறியுள்ள வடகிழக்குப் பகுதியை நோக்கினால் இந்த உண்மை தெளிவாகும். நீண்டகாலமாக உள்நாட்டு யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட ஆபிரிக்க நாடான சூடானிற்கு நான் பல தடவைகள் சென்றுள்ளேன். அங்கும் யுத்தத்தின் விளைவாக கொடிய வறுமைக்காளான பெருந்தொகையான மக்களின் அவல வாழ்க்கையை நேரில் கண்டுள்ளேன். இலங்கையின் வடகிழக்கிலும் சரி சூடானிலும் சரி அல்லது உள்நாட்டு யுத்தம் இடம் பெறும் எந்த நாட்டை எடுத்துக் கொண்டாலும் யுத்தத்தின் விளைவுகளால் பெரிதும் பாதிக்கப்படுவோர் பெண்களும் குழந்தைகளுமே. யுத்தத்தின் விளைவுகள் பெண்களின் குடும்பச் சுமைகளை மேலும் அதிகரிக்கவே செய்கின்றன. அவை வறிய குடும்பங்களைச் சார்ந்த குழந்தைகளின், இளம் சந்ததியினரின் நீண்ட கால மனித அபிவிருத்திக்கு பாரிய தடைகளைப் போடுகின்றன.

இந்த கட்டுரையில் இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பில் வறுமையால் பாதிக்கப்பட்ட பெண்களில் ஒரு சிலரின் அனுபவங்களை அவர்களிடமிருந்து கேட்டவற்றை மாத்திரம் அடிப்படையாக வைத்துக் கூற விரும்புகிறேன். அதற்கு முதல் சில முக்கியமான பொதுக் கருத்துக்களைத் தெரியப்படுத்துவது அவசியம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## காரணிகளிலிருந்து விளைவுகளுக்கு

உள்நாட்டு யுத்தம் சுனாமி போன்று ஒரு திடீர் சம்பவம் அல்ல. அது சு அமைப்பு ரீதியான காரணிகளினதும் அரசியல் மயமாக்கலினதும் விளைவா தோன்றும் ஒரு தொடர் போக்காகும். பலாத்காரத்தின் வருகையும் ஒரு அரசி பிரச்சனையின் இராணுவ மயமாக்கலும் நீண்ட காலத்திற்கு முன்கூட்டி எதிர்பார்க்க கூடிய விளைவுகளாகும். உதாரணத்திற்கு இலங்கை தேசிய இனப்பிரச்சனையின் அரசியல் பரிமாணப் போக்கினை அவதானி வந்தவர்களுக்கு அங்கு உள்நாட்டு யுத்தம் உருவானது ஒன்றும் ஆச்சரியத்துக்கு விடயமல்ல. அடிப்படையில் சமூக பொருளாதார சந்தர்ப்பங்கள், வளங்கள், அரசியல் அதிகாரம் போன்றவற்றின் பங் பற்றிய முரண்பாடுகளின் இனத்துவமயமாக்கலே இலங்கையின் தேசிய இனப் பிரச்சனை யுத்தமயமாக்கப்படுவதற்கு காரண ஆயினும் யுத்தம் நீண்டகாலமாக இடம் பெறும் போது அதன் விளைவுகள் மேலும் புதிய சமூக பொருளாதார பிரச்சனை தோன்ற வழிசமைக்கின்றன. உதாராணத்திற்கு உயிர் இழப்புக்கள், அங்கவீனர்களாகப்படல் இடப்பெயர்வுகள் முன்னர் இல்ல அவலங்களையும் பிரச்சனைகளையும் தோற்றுவிக்கின்றன. இவை மனிதாபிமான பிரச்சனைகள் மட்டுமல்ல அவற்றிற்கும் அப் சீவனோபாய மனித உரிமைகள் சார்ந்த பிரச்சனைகள். இவை யுத்தத்தின் காரணிகளுக்குள் அடங்கவில்லை. இவை விளைவு ஆனால் யுத்தத்தின் தீர்வு இந்தப் பிரச்சனையும் உள்ளடக்கியதாகவே இருக்கவேண்டும். அல்லாவிடில் நிலைபெறு அமைதியை காணமுடியாது. இங்கு இந்த விளைவுகளின் பெரும் பங்கினைச் சுமக்கும் பெண்களினதும் இளம் சந்ததியினரினதும் உரிமை முக்கியத்துவம் பெற வேண்டும். ஆனால் இந்த வறிய சமூக ரீதியில் ஓரங்கட்டப்பட்ட பகுதியினரின் குரலுக்கு இடம் உன என்ற கேள்வி எழுகிறது.


இங்கு வர்க்கம் மற்றும் சமூக அந்தஸ்து சார்ந்த ஒரு அம்சத்தையும் மனங்கொள்ள வேண்டும். யுத்தத்தின் விளைவுகள் பெரும்பா பாதகமாக இருக்கும் அதேவேளை அவை வசதி படைத்தோருக்கு புதிய சந்தர்ப்பங்களைத் தேடி நகரும் உந்தல்களாக அமைகின்றன. யுத்தகால நிர்ப்பந்தங்களால் மேற்கத்திய நாடுகளை நோக்கி நகரும் வாய்ப்புக்களைக் கொண்டோர் அவற் பயன்படுத்தி யுத்தத்தின் அன்றாட கொடுமைகளிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்வதோடு புதிய பொருளாதார வாய்ப்புக்கள தேடும் சந்தர்ப்பங்களையும் பெற்றுக் கொள்கின்றனர். ஆகவே யுத்தத்தின் விளைவுகள் பற்றிப் பார்க்கும் போது அவற் பயனடைவோரை மறந்து விடக்கூடாது. வெளிநாடு சென்றோர் தாய் நாட்டில் வாழும் உறவினர்களுக்கும் நண்பர்களுக் நேரடியாக உதவும் போக்கும் முக்கியமானதாகும்.

இலங்கையின் யுத்தத்தின் உச்சக்கட்ட காலத்தில் ஏறக்குறைய 10 இலட்சத்தினர் உள்நாட்டில் இடம் பெயா முகாம்களிலும் உறவினர்கள் நண்பர்களுடன் வாழ்ந்து வந்தனர். 2002 ம் ஆண்டு இரண்டாம் மாதத்தில் அரசாங்கத்திற் விடுதலைப்புலிகளுக்குமிடையே ஏற்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் விளைவாக மூன்று இலட்சத்திற்கு மேலான இ பெயர்ந்தோர் வடகிழக்கில் தமது வாழிடங்களை நோக்கித் திரும்பினர். ஆயினும் சமாதானப் பேச்சு முறிந்ததைத் தொட இவர்கள் தமது சீவனோபாயங்களை மீள் அமைப்பதில் பல பிரச்சனைகளை எதிர்நோக்குகிறார்கள். இடம்பெயர்ந்தோரில் பிரிவினர் நிரந்தரமாக வேறிடங்களில் குடியேறியுள்ளனர். மிக சமீபத்திய தகவல்களின் படி 360,000 பேர் இன்னும் முகாம்களிலே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




**Map of Batticaloa District Showing Government- Controlled and LTTE-Controlled Areas**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களில் வடக்கில் உயர் பாதுகாப்பு வலயங்களை அமைப்பதற்காக வெளியேற்றப்பட்டவர்க அடங்குவர். இந்த முகாம்களில் பெண்களும் சிறுவர்களும் பலவிதமான பிரச்சனைகளால் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை சமீபத்திய அறிக்கைகள் ஊர்ஜிதம் செய்துள்ளன.

யுத்த காலத்திலும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்குப் பின்னும் கிழக்கில் குறிப்பாக மட்டக்களப்பில் கள ஆய்வுகளில் ஈடு சந்தர்ப்பங்கள் எனக்கு கிடைத்தன. 2001 - 2003 காலகட்டத்தில் மட்டக்களப்பின் வந்தாறுமூலை, கொம்மாதுறைப் பகுதிக மக்களின் வாழ்வாதாராப் பிரச்சனைகள் பற்றி ஆழமாக அறியும் நோக்கில் பலருடன் நீண்ட உரையாடல்களை மேற்கொண் இப்படியாக நான் நேர் கண்டவர்களில் பலர் வறிய பெண்கள். 1990 இல் வந்தாறுமூலை, கொம்மாதுறை கிராமங்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டன. அரச இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே ஏற்பட்ட பெரும் மோதலின் விளை ஏறத்தாழ கொம்மாதுறை வாசிகள் அனைவரும் இடம் பெயர்ந்தனர். இராணுவத்தினர் பெருந்தொகையான இளைஞர்க சுட்டுக் கொன்றனர். 1991 வரை இடம் பெயர்ந்தோரில் பலர் காடுகளில் மாதக்கணக்கில் வாழ்ந்தனர். 1991இல் அவர்கள் வீடுகளுக்குத் திரும்பிய போது வீடுகளிலிருந்த பொருட்கள் சூறையாடப்பட்டிருப்பதை அறிந்தனர். தத்தமது வாழ்வாதாரங்க மீளமைக்க முற்பட்டனர். ஆனால் இது தொடர்ச்சியான இக்கட்டான நிலைமைகளிலேயே இடம் பெற்றது. கொம்மாதுறை இலங் அரச இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்தது. அங்கு வாழ்ந்த மக்களின் பெரும்பாலானோரின் வாழ்வாதாரவளங் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த பரந்த படுவான்கரையும் அதை அண்டிய பகுதிகளிலும் இருந்தன. இரண்டு அரசுகளு இடையே மக்கள் வாழ்ந்தனர் தொடர்ந்தும் வாழ்கிறார்கள். யுத்த நிறுத்தத்திற்கு முன்னர் ஒரு பகுதியிலிருந்து மற்றப் பகுதி போய் வர பல கடுமையான கட்டுப்பாடுகள்.

இக்காலகட்டத்தில் கொம்மாதுறையின் வறிய கிராமியத் தொழிலாளர்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டனர். இவ நிலமற்றவர்கள். ஒருசில குடும்பங்கள் பரம்பரையாக பிரப்பங் கைவேலைகளுக்கூடாக சீவனோபாயத்தைத் தேடுபவர்கள். இ தொழிலுக்குத் தேவையான மூலப்பொருட்கள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலேயுள்ள மேற்குப் பகுதியிலேயே இருக்கின் காடுகளிலிருந்து இவற்றைப் பெறுவதற்கு செங்கலடி கறுத்தப் பாலத்தில் அமைந்துள்ள இராணுவ சோதனைச்சாவடி கடந்தே செல்ல வேண்டும். இதேபோன்று இன்னொரு சாரார் மேற்கில் இருக்கும் கல்வாடிகளிலும், நெல் வயல்களிலும் கூ தொழிலாளர்களாக வேலை செய்பவர்கள். யுத்த காலத்தில் இவர்களது தொழில் வாய்ப்புக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருந் இவர்களிற் பலரிடம் தேசிய அடையாள அட்டைகள் இல்லாததால் இவர்களின் தொழில்ரீதியான நகர்ச்சிகள் சிரமமாகவே இருந் சமாதான காலங்களில் மட்டக்களப்பிற்குள் மாத்திரமன்றி அக்கரைப்பற்று, பொலனறுவை போன்ற இடங்கள் வரை பயணம் செ கூலிக்கு வேலை செய்து தமது குடும்பங்களின் வாழ்வாதாரத்தைத் தேடுபவர்கள். இராணுவக்கட்டுப்பாடுகள், அவசரகால போன்றவற்றால் இவர்களின் நகர்ச்சி பாதிக்கப்பட்டது. இந்த கால கட்டத்திலும் இதற்கு முன்னரும் பெண் தொழிலாளர்களு உள்ளூரில் வாய்ப்புகள் இருக்கவில்லை. வறிய குடும்பங்களுக்கு அரசாங்கத்தின் 'சமுர்த்தி' ஆதாரத்தை தவிர வேறு உதவ குறைவு. இடப்பெயர்வின் போது அரசு சாரா நிறுவனங்களின் மனிதாபிமான உதவி கிடைத்தது. பின்னர் அதுவும் நின்றுவிட்

மறுபுறம் யுத்த காலத்திலும் தமது சொத்துக்களின் உதவியுடன் வீட்டுப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பு முன்னேறியவர்களையும் கண்டேன். விவசாயநிலம் அதுவும் நீர்பாசன வசதியுள்ள விவசாயநிலம், சொந்த சேமிப்பு அல்லது உறவின உதவி முதலீடு, செய்யக் கடன் பெறும் வசதி போன்ற சாதக நிலைமைகளைக் கொண்டோர் யுத்தகால நெருக்கடிக்குள்ளே முன்னேறும் வாய்ப்புக்களைக் கொண்டிருந்தனர். இது போன்ற வேறு பல உதாரணங்களையும் தர முடியும். யுத்தத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ாக்கங்கள் எல்லோரையும் ஒரே மாதிரியாகப் பாதிக்கவில்லை. சொத்துக்களுள்ளோர்களுக்கு சொத்துக்களற்றோர்களைவிட ழப்புக்கள் அதிகமாயிருக்கலாம். அதேவேளை இந்த தாக்கங்களிலிருந்து விடுபடும் ஆற்றல்களும் அவர்களிடம் பொதுவாக ள்ளன. குறிப்பாக உற்பத்தி சாதனங்கள், கல்வியறிவு, தொழில் தகைமைகள் பக்கபலமாயிருக்கும் சமூக வலைப்பின்னல்கள் ள்ளோர் யுத்த இடர்பாடுகளிலிருந்து துரிதமாக விடுபடுவதை கிழக்கில் மாத்திரமல்ல வேறு பகுதிகளிலும் கண்டுள்ளேன். வட ழக்கில் பெரும்பான்மையினர் யுத்தத்தினால் இடர்பாட்டிற்காளாகிறார்கள் ஆனால் இடர்பாடுக்காளாகும் எல்லோரும் வறியவர்கள் அல்ல. வறியவர்களிடம் இழப்பதற்கு சொத்துக்கள் இல்லை, ஆனால் வேலை இழப்பு அவர்களின் தீங்குறு நிலையை மேலும் ாசமாக்குகிறது. பட்டினி, உடல் நலிவு, மற்றும் குழந்தைகளின் மனித விருத்தியின் பின்னடைவு போன்றவை இவர்களின் ாழ்வின் நிரந்தரத் துன்பியல்களாகி விட்டன.

## றிய பெண்களின் வாழ்நிலைகளும் தனியான போராட்டங்களும்

> 'ஆமியின் செல்லடியால் பலர் செத்துப் போனார்கள் அப்படி ஒரு செல் ஏன் என்னைக் கொல்லவில்லை என பலதரம் நினைச்சிருக்கிறன்'

து அப்போது 22 வயதான பரமேசுவரியின் (சொந்தப் பெயர் அல்ல) வார்த்தைகள். பரமேசு ஒரு வறிய குடும்பத்தில் றந்தாள். மிக இளமையான வயதில் பெற்றோரின் ஒழுங்குப்படி விவாகம் செய்து கொண்டாள். நான் அவளை நேர்கண்ட போது ரண்டு பிள்ளைகளையும் அவளையும் கைவிட்டு பரமேசின் கணவன் வேறொரு பெண்ணைத் தேடிக் கொண்டான். பரமேசுவரி ழந்தைகளுடன் தனது பெற்றோருடன் வாழ்ந்து வருகிறாள். 'சமுர்த்தி' ஆதாரத்தைத் தவிர அவளுக்கு வேறொரு வருமானமும் ல்லை. அமைப்பு ரீதியில் பரமேசின் வாழ்க்கை 'பெற்றோர்- கணவன் - மீண்டும் பெற்றோர்' எனும் ஒரு மூடிய வட்டத்திற்குள்ளேயே றைபட்டுள்ளது. தான் ஆரம்பக்கல்விக்கு அப்பால் கற்கவில்லை என்றும் தற்போது தன்னிடம் தொழில் செய்யும் சரீரபலமோ ற்றலோ இல்லை என்றும் பரமேசு தன்னைப் பற்றி குறைப்பட்டுக் கொண்டாள். தான் கணவனுடன் வாழ்ந்த காலத்தில் னக்கு மற்றவர்கள் மதிப்புக் கொடுத்தார்கள் என்றும் இப்போது தான் திருமண வீடுகளுக்கோ கோவில் திருவிழாக்களுக்கோ ாவதில்லையென்றும் பரமேசு மனம் நொந்து கூறினாள். வறுமையும் ஆணாதிக்க அமைப்பு உறவுகளும் பரமேசுவை சுய ம்பிக்கை இழந்த ஓர் வாழ்நிலைக்கு இருபத்தி இரண்டு வயதிலேயே தள்ளிவிட்டன எனலாம். யுத்தகால நிலைமைகள் அவளுக்கு மலும் விரக்தியையே ஏற்படுத்தியிருந்தன.

னால் வறுமை, ஆணாதிக்கம் அவற்றுடன் யுத்தகாலக் கொடுமைகள் இவற்றிற்கூடாக எதிர்நீச்சல் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் ாலாவின் (சொந்தப் பெயரல்ல) கதை பரமேசுவின் கதையிலிருந்து வேறுபட்டது. மிதமிஞ்சிய தனிப்பட்ட அவலங்களை னுபவித்த மாலா தனது சுய ஆற்றலில் நம்பிக்கை இழக்கவில்லை

> 'வறிய பெண்கள் தான் அரேபிய நாடுகளுக்கு வீட்டு வேலை செய்யப் போகிறார்கள். குடும்பத்தைக் காக்க அதுதான் கடைசிவழி. யுத்த நிலைமைகளினால் நானும் அங்கு போக முடிவெடுத்தேன். ஆனால் எனக்கு அதிர்ஷ்டம் இருக்கவில்லை. காசு போனது மட்டுமல்ல என்ட பிள்ளைகளுக்கு தாயாக இருக்க முடியல்ல பிள்ளைகளால் கல்வியைத் தொடரவும் முடியல்ல.'



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தனது கதையைக் கூறும் போது மாலா பல தடவைகள் கண்கலங்கினாள். ஆனால் மனந்தளரவில்லை. மாலாவின் கணவன் இல் இலங்கை இராணுவத்தினால் சுட்டுக் கொல்லப்பட்டான். அப்போது மாலாவிற்கு இரண்டு குழந்தைகள் -12 வயது மகன் வயது மகள். இறந்த கணவன் ஒரு கிராமியத் தொழிலாளி. குடும்பத்தைக் காக்கும் நோக்கில் மாலா ஜோர்டானிற்கு வீட்டுப்ப பெண்ணாக வேலை செய்யப் போக முடிவெடுத்தாள். ஆனால் அவளிடம் பணம் இருக்கவில்லை. இந்தக் கட்டத்தில் ஒரு மாலாவைத் தான் விவாகம் செய்ய விரும்புவதாகவும் மாலா வெளிநாடு செல்லக் கடன் பெறுவதற்கு தனது குடும்பம் உ செய்யும் என்று கூறினான். அத்துடன் மாலா வெளிநாட்டிலிருக்கும் போது தனது தாயுடனும் தன்னுடனும் மாலாவின் குழந்தை பாதுகாப்பாக இருக்க முடியும் என்று கூறினான். இது ஒரு வசதியான ஒழுங்காகவே மாலாவுக்குத் தோன்றியது. ஆகவே இ விவாகப் பேச்சையும் மற்றைய ஒழுங்குகளையும் மாலா ஏற்றுக் கொண்டாள். விவாகம் செய்பவன் முன்னர் விவாகம் செய்து பிள்ளையுடன் இப்போ பிரிந்து வாழ்பவன்.



மாலா 1996 இல் ஜோர்டானிற்கு சென்றாள். மாதம் 3000 ரூபாய் சம்பளம். இதை வீட்டிற்கு அனுப்பி வைத்தாள். ஆனால் அவள் கடமையாற்றிய வீட்டில் பலவாறாகத் துன்புறுத்தப்பட்டாள். இலங்கை தூதுவர் காரியாலயத்தின் உதவியுடன் வேறொரு வீட்டில் வேலை பெற முடிந்தது. அங்கும் பல பிரச்சனைகள். தொழில் பார்த்த வீட்டுத்தலைவி மாலாவை அடித்து துன்புறுத்த முற்பட்ட போது மாலா தற்பாதுகாப்புக்காக அவளைத் தாக்க நிர்ப்பந்திக்கப்பட்டாள். இதன் விளைவாக மாலா ஜோர்டான் சிறையில் அடைக்கப்பட்டாள். அங்கே அந்தச் சிறைச்சாலையில் அவள் நூற்றுக்கணக்கான இலங்கை மற்றைய ஆசிய நாடுகளிலிருந்து சென்ற பணிப்பெண்களைச் சந்தித்தாள். மீண்டும் இலங்கை தூதுவர் காரியாலயத்தின் உதவியுடன் சிறையிலிருந்து விடுபட்ட போது நாடு திரும்பினாள். கொழும்பு துறையில் அவள் கண்டது ஏமாற்றத்தையும் வேதனையையும் கொடுத்தது. மாலாவிற்கும் அவளது புதிய கணவனுக்கும் இடையே இருந்த புரிந்துணர்வின் படி அவள் அனுப்பிய பணம் பயன் படுத்தப்படவில்லை. ஜோர்டான் செல்வதற்கு பெற்ற கடன் முற்றாக அடைக்கப்படவில்லை. பிள்ளைகளின் கல்வி நின்று விட்டது. மாலாவின் மகன் கூலி வேலைக்கு அனுப்பப்பட்டிருந்தான். இது மாலாவின் நீண்ட கதையின் சுருக்கம். தனது நீண்ட கதையைக் கூறிய மாலாவிடம் எதிர்காலத் திட்டம் பற்றிக் கேட்டேன். அவளுடைய பதில் ஆச்சரியத்தை கொடுத்தது. "மீண்டும் அரபு நாடொன்றுக்குச் செல்வதே எனது முடிவு. வேறு வழியில்லை" ஆனால் முடிவுக்கு மாலா கொடுத்த நியாயப்பாடு முக்கியமானது. அவளுடைய கணவனில் நம்பிக்கையிழந்துவிட்டாள். தனக்கும் பிள்ளைகளுக்கும் நிலையான பொருளாதாரத்தை தேடுதல் அவளுடைய முன்னுரிமை இருந்தது. இதை மாலா கணவனிடமிருந்து சுதந்திரமாகவே செய்ய முடிவெடுத்திருந்தாள். அரபுநாடு சென்று பணம் சேம தனக்கென ஒரு பொருளாதார அடித்தளத்தை உருவாக்க விரும்புவதாக சொன்னாள். அப்படியானால் என்ன திட்டமென கேட்ட போது சேமிக்கப் போகும் பணத்தை வைத்து ஒரு சில்லறைக் கடை வைக்கப் போவதாகக் கூறினாள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லாவின் திட்டம் வெற்றி பெறுமா இல்லையா என்பதை முன்கூட்டியே கூறுவது கடினம். மாலாவின் அல்லது பரமேசுவரியின் னுபவங்களை மனப்பாங்குகளை யுத்த நிலைமைகளை மட்டும் வைத்து விளக்கி விடமுடியாது. யுத்தத்தின் தாக்கங்கள் து சமூகத்தின் அடியே உள்ள உறவுகளின் அமைப்பு ரீதியான ஆதிக்கங்களின் தன்மைகளை கோரமாக வெளிக் காணர்ந்தன. மாலாவை மீண்டும் எடுத்துக் கொள்வோம். குடும்பத்தின் நலனுக்கு முக்கியத்துவம் கொடுத்து எடுத்த முயற்சிகள் திர்பாத்த பலனைத் தரவில்லை. மாலாவே குறிப்பிட்டது போல நமது சமூகத்தில் வறிய பெண்களே மத்திய கிழக்கிற்கு ட்டுப் பணிப்பெண்களாகப் போகிறார்கள். ஆணாதிக்கம், பணத்திமிர் அத்துடன் நிறவாதம் கொண்டுள்ள அரபு வீடொன்றில் னியனாக்கப்பட்ட உழைப்பாளியாக இருப்பது ஒரு பெண்ணுக்கு ஒன்றும் விடுதலை கிடைத்த மாதிரியல்ல. மீண்டும் அத்தகைய ந வழியையே மாலா தேடுவது அவளது மாற்று வழிகளற்ற நிலைமையே காட்டுகிறது. தான் பிறந்த நாட்டில் வேலை செய்யும் ாய்ப்புக்கள் இல்லை. அதேவேளை எப்படியும் தனது கணவனிடமிருந்து சுதந்திரமாக ஒரு பொருளாதார ஸ்திரப்பாட்டினை தானும் ள்ளைகளும் பெற வேண்டும் என்ற எண்ணம் மாலாவிடம் ஆழமாகப் பதிந்துள்ளது.

தே கொம்மாதுறையின் வேறொரு பகுதியிலிருந்து சில ஆண்களும் மத்திய கிழக்கிற்கு சென்று தொழில் பார்த்து நல்ல மிப்புக்களுடன் திரும்பியுள்ளார்கள். இவர்கள் இயல்புசார் ஆற்றல் உடையவர்கள். வாகனசாரதியாக அல்லது இயந்திரங்களை பக்குபவர்களாக வேலை செய்து வருமானத்தின் கணிசமான பகுதியை சேமித்து நாடு திரும்பி உழவு இயந்திரம், நெற்காணி ான்றவற்றில் முதலீடு செய்து தமது வீட்டுப் பொருளாதாரங்களை வளப்படுத்தி கொண்டனர். நிலமற்ற வறிய குடும்பங்களைச் ர்ந்த ஆண்களிடம் மத்தியகிழக்கில் வேலை வாய்ப்புகள் பெறும் இயல்புசார் ஆற்றல்கள் மிகக்குறைவு அல்லது இல்லவே ில்லை. அங்கே விசேட தொழில் திறமைகள் இல்லாத ஆண்களுக்கு வேலை கிடைப்பது மிக குறைவு. அத்துடன் ண்களுக்கு அரபு நாட்டில் வேலை பெற்றுக் கொடுக்க ஏஜெண்டுகள் அதிக பணம் கேட்கிறார்கள். பெண்களைப் பொறுத்தவரை ட்டுப்பணியாளாக வேலை செய்வதற்கு விசேட தகைமைகள் தேவையில்லை. ஏஜெண்டுகள் கேட்கும் பணத்தொகையும் குறைவு. கவே பல வறிய குடும்பங்களில் பெண்களை அரபு நாடுகளுக்கு வேலைக்கு அனுப்புவதை ஆண்களும் விரும்புகிறார்கள். இது றுமையின் அமைப்பு ரீதியான உறவுகள் ஆண்களையும் பெண்களையும் தாக்குவதையும் அதேவேளை குடும்ப உறவுகளின் ணாதிக்கத்தையும் ஒரே வேளையில் வெளிப்படுத்துகிறது.

ாம்மாதுறையில் நான் கண்ட வறுமையின் சில அம்சங்களை இங்கு தொட்டுக் காட்டினேன். அதே சமூகத்தில் செல்வந்தர்களும், த்தர மட்டத்தினரும் இருக்கிறார்கள் என்பதையும் குறிப்பிட்டேன். ஆனால் யுத்தத்தின் விளைவாக சீவனோபாய உரிமையிழப்பு, றுமை அதிகரித்துள்ளதென்பதில் சந்தேகமில்லை. ஒரு தடவை நானும் எனது ஆய்வுக்குழுவினரும் 60 மனைகளை நேர்கண்டு வர்கள் தமது வாழ்வாதார நிலையை எப்படி சுயமதிப்பு செய்கிறார்கள் என அறிய முற்பட்டோம். செல்வந்த - உயர் அல்லது ூ நடுத்தரத்தினர் – வறியவர்/ மிகவறியவர் எனும் நிலைமைகளில் எது உங்களது அந்தஸ்து எனக் கருதுகிறீர்கள் எனக் ட்டோம். ஏறக்குறைய 60 வீதத்தினர் தாம் வறியவர் அல்லது மிகவறியவர் எனக் குறிப்பிட்டனர். ஏன் அப்படி கருதுகிறார்கள் ன்பதையும் அவர்களால் விளக்க முடிந்தது. தமது சமூகத்தை அவர்களால் வகைப்படுத்த முடிந்தது. வறியவர்கள் மிக றியவர்களில் கணிசமானோர் நிலமற்றவர்கள். வறியவர்கள் வாரத்தில் இரண்டு மூன்று நாட்கள் மட்டுமே இருவேளை ணவை மாத்திரம் பெறுகிறார்கள். மிக வறியவர்கள் வாரத்தில் பெரும்பாலான நாட்கள் ஒருவேளை உணவை மட்டுமே பெறக் டியவர்களாய் இருக்கிறார்கள். இப்படியாகத் தமது நிலைமைகளை விளக்கியவர்கள் யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்குப் பின்னர் லை தேடி நகரும் சுதந்திரம் அதிகரித்துள்ளதாகக் கூறினர். இவர்களிற் பெரும்பாலானோர் ஏற்கனவே குறிப்பிட்டதைப்போல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உடல் நலிவுற்றிருப்பதால் வேலை செய்யும் வல்லமையை இழந்தோராகக் காணப்பட்டனர். மிக வறிய குடும்பங்களிற் கணவனை இழந்த பெண்களின் குடும்பங்களாக இருக்கின்றன. தனி நபர்களுடனும், குழுக்களுடனும் செல்வம் - வறு என்பன பற்றி நடாத்திய கலந்துரையாடல்களில், செல்வந்தர் பற்றிய விவரணத்தை பின்வருமாறு சுருக்கிக் கூறலாம். பர நீர்ப்பாசன வசதியுள்ள வயல்நிலம், உழவு யந்திரம், கல்வி அறிவு, உயர் ஊதியம் தரவல்ல உத்தியோகம், பெரு இலா தரும் பெருவியாபாரம், மேட்டுப்பகுதியில் பெரிய காணியில் வசதியான வீடு போன்றவை செல்வந்தர்களின் குணாதிசயங்களா கருதப் படுகின்றன. மட்டக்களப்பில் மரபுரீதியாக கால்நடைகளும் .முக்கியமான சொத்தாகக் கருதப்பட்டன. யுத்த காலத் கால்நடைகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. சொத்துக்களுடனும், கல்வியறிவுடனும் அதிகாரத்தையும் இனம் கண்டனர். நவீன யுகத் கல்வியறிவு மேல்நோக்கிய சமூக நகர்ச்சிக்கு முக்கியமான தேவையாகும். ஆனால் கொம்மாதுறையின் வறிய குழந்தைகளு இத்தகைய சந்தர்ப்பம் மறுக்கப்படுவதால் அவர்களின் எதிர்காலம் மீண்டும் வறுமையை மீள் உற்பத்தி செய்யும் ஒரு சந்ததிய உருவாக்கமாகவே தெரிகின்றது. இந்த நிலை கொம்மாதுறையில் ஒரு பகுதியான ஒருமுழச் சோலையில் மிகக் கூடுதலாக இருப்பதை அவதானித்தேன். செல்வந்தர் வறியவர் என்பனவற்றுக்கிடையே பல மட்டங்களில் நடுத்தரத்தினரையும் காணல யுத்த காலத்தின் இழப்புக்களால் பல நடுத்தரக் குடும்பங்கள் வறிய குடும்பங்களாயின. இவற்றிற் சில மீண்டும் மேல் நோக் நகர்வதைக் காணக்கூடியதாக இருந்தது.



தொடர்ச்சியான முடக்கமும் வறுமையும் சந்ததிகளுக்கூடாகத் தொடரும் போக்காகிவிட்டது. யுத்தத்திற்கு முன்பிருந்த ந சமூகத்தில் ஆழப் பதிந்துள்ள உறவுகள் யுத்தத்தின் தாக்கத்தால் எப்படி வெளிப்படுகின்றன, இவற்றின் நீண்ட காலப்பாதிப்புக் எத்தகையானவை என்பது பற்றிய கலந்துரையாடல்கள் விவாதங்கள் தமிழ் சமூகத்தில் இடம் பெறுவது அரிதே. மனிதாபிமா பிரச்சனைகள், நிவாரணத்தேவைகள் போன்றவை யுத்தத்தின் விளைவான சில மனித உரிமைப் பிரச்சனைகள் போன்றவை பற் கேட்கிறோம். ஆனால் இனவிடுதலை சமாதானம் போன்றவற்றிற்கும் முற்போக்கான சமூக மாற்றத்திற்குமிடையிலான உறவு பற்றி எப்போது விவாதிக்கப் போகிறோம் என்ற கேள்வி எழுகிறது. ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 200 ஆண்டுகளில் நோர்வே பெண்கள் இயக்கம்

*Tekst av Aud Farstad, 1.konsulent, Jugendstilsenteret Ålesund*
*Foto: Simon Vimalarajan, Sunnmørsposten*
*Oversatt på tamilsk: Banubharathy*




### நோர்வே பெண்கள் இயக்கம் 200 ஆண்டுகள்

1975இல் ஐக்கிய நாடுகள் சபை மார்ச் 8ஐ பெண்கள் தினமாகப் பிரகடனப்படுத்தியது. ஆனால் பெண்கள் தினம் அதற்கு முன்பிருந்தே நினைவுகூரப்படத் தொடங்கியது. உண்மையில் இந்த எண்ணக் கருவானது ஜேர்மனியைச் சேர்ந்த பெண்ணிலை வாதியும், சோசலிச வாதியுமான கிளாறா செட்கின் என்பவரால் கொண்டுவரப் பட்டதாகும். இந்த நாள் சர்வதேச பெண்கள் உரிமைப்போர் நாளாக நினைவுகூரப் படுகின்றது.

நோர்வேயில் 1970களின் ஆரம்பங்களில் நோர்வேப் பெண்கள் இயக்கம் இந்த நாளை எல்லோரும் அறியும்படி செய்தது. இந்தப் பத்து வருடங்களிலும் ஆர்ப்பாட்டங்கள், கருத்தரங்குகள், கலை நிகழ்ச்சிகள் மூலமாக பெண்களது உரிமைகளை முன்னிறுத்தி நினைவு கூரப் பட்டது.

### நோர்வே இன்று

எல்லா அரசியல் அமைப்புக்களைப் போலவே பெண்களியக்கமும் ஏற்ற இறக்கங்களைக் கொண்டிருந்தது. இன்று நோர்வேயில் பெண்கள் சம உரிமையை எட்டி விட்டதாகவே இளம் சமூகத்தினர் கருதுகின்றனர். ஆனால் 'சம உரிமைக்கான யுத்தம் என்பது அடிக்கடி புதிய தலைமுறையினரால் முன்னெடுக்கப்பட வேண்டியதாயுள்ளது' என்பதே சமூகத்தில் ஏனையோரது கருத்தாகும். அதேவேளை நோர்வேப் பெண்கள் உலகிலேயே அதிக உரிமை பெற்றவர்களில் ஒரு பகுதியாகின்றனர். 'எமக்கு உயர் கல்விக்கான அனுமதி இருக்கின்றது. இன்று உயர் கல்வி கற்கும் மாணவர்களில் பத்தில் ஆறுபேர் பெண்களாக இருக்கின்றார்கள். கருக்கலைப்புச் செய்வதற்கும், கருத்தடைச் சாதனங்களை உபயோகிப்பதற்கும் எங்களுக்கு இருக்கின்ற உரிமையினூடாக இன விருத்தியை நாங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள முடிகிறது. திருமணம் செய்வதற்கும், முரண்பாடுகளேற்படுமிடத்தே பிரிந்து போவதற்கும் எங்களால் முடிகின்றது. ஆண்கள் செய்யும் அதே வேலைகளில் பெண்களும் சமனாக ஈடுபட முடிகின்றது. எங்களது சொந்த பொருளாதாரத்தை நாங்களே ஒழுங்கு படுத்துகின்றோம். குழந்தைப் பேற்றுக்காலங்களில் சம்பளத்துடன் கூடிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஓய்வுகாலம் எடுத்துக்கொள்ள உரிமை உள்ளது. எண்ணை வளத்தால் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தைக் கொண்டுள்ள நாடாக நோர்வே திகழ்கிறது. இங்கே எல்லோரது வாழ்க்கைத் தரமும் உயர்வாக உள்ளதோடு பெண்களின் உரிமைகளும் பே படுகின்றது.

## 1800களில் அபிவிருத்தி

1800இல் இருந்து 1900ம் ஆண்டின் ஆரம்ப காலங்களில் நோர்வே ஐரோப்பாவில் மிகவும் வறுமைக் கோட்டின் கீழ் இரு நாடாகும். 1800 காலப் பகுதி முழுவதும் கிராமப்புறங்களிலுள்ள அதிகமான மக்களில் பெண்கள் மிகவும் கடுமையாக தங் வீடுகளிலும், பண்ணைகளிலும் உழைத்தார்கள். உத்திரம் தயாரிப்பதிலும், குளிருடைகள், கையுறைகள் பின்னுவதிலும், தை வேலைகளிலும் கடினமாக உழைத்தார்கள். உணவு தயாரித்தல், குழந்தைகள் பராமரிப்பு, அதிகளவான பண்ணை வேலை பெண்களின் பணிகளாகத்தான் இருந்தன. திருமணமான ஒரு பெண் சராசரியாக பன்னிரண்டு குழந்தைகளோ, அல்லது அத மேலோ பெற்றெடுப்பது வழமையாயிருந்தது. பல பெண்கள் பிரசவ வேளையில் இறந்து போனார்கள்.



விவசாய பண்ணைகளைச் சேர்ந்த குழந்தைகளுக்கு ஆரம்பக்கல்வியும், பாடசாலை வசதிகளும் மிகவும் குறைவாகவே இருந்தது. எனினும் எல்லோரும் எழுதவும் வாசிக்கவும் கற்றுக்கொண்டார்கள். பெண்கள் உயர்தரக்கல்வி கற்கவோ பல்கலைக்கழகம் செல்லவோ அனுமதி இருக்கவில்லை. சொத்துக்களை உரிமை கொள்வதற்கு பெண்களுக்கும், கணவனை இழந்தவர்களுக்கும் மிக மிகக் குறைவான சந்தர்ப்பங்களே இருந்தன. 1800ஆம் ஆண்டுப் பகுதியிலே ஏற்பட்ட ஒரு சீர்திருத்தம் பெண்களுக்கு சில சலுகைகளைப் பெற்றுத் தந்தது. பெண்கள் வியாபாரத்தில் ஈடுபட அனுமதி அளித்தது. அதனால் பெண்களுக்கும் ஆண்களுக்கும் சம சொத்துரிமை என்றதோர் நிலமை இங்கே உருவாகியது. அடிப்படைக் கல்வி நிலைகளிலும் மாற்றம் ஏற்பட்டது. இந்த நூற்றாண்டின் முடிவில் (18ம் நூற்றாண்டின் முடிவில்) பெண்கள் ஆசிரியர் கலாசாலைக்கு அனுமதி பெற்றதோடு 1884இல் பல்கலைக்கழகப் பிரவேசத்திற்கும் அனுமதி கிடைக்கப் பெற்றனர்.

இத்தகைய எல்லா சீர்திருத்த முயற்சிகளும் முதலில் ஆண்களாலேயே முன்னெடுக்கப் பட்டது. அவர்களிடம்தான் வாக்குரிமை இருந்தது. அரசு யந்திரத்தை இயக்குவதும் ஆண்களாகவே இருந்தனர்.

## பெண்கள் இயக்கம்

1854இல் வெளிவந்த 'நகரபிதாவின் மகள்' கமில்லா கொல்லற்றினால் எழுதப்பட்ட முதல் யதார்த்தவாத நாவலாகும். இ நாவல் பலரது கவனத்தைத் திசை திருப்பியதுடன் பெண்களிடையே நாடு தழுவிய ரீதியில் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி நாவல், இளம் பெண்கள் தங்களால் நேசிக்கப் படாத ஒருவருக்கு கட்டாயத் திருமணம் செய்து வைப்பது பற்றிய கடுமை ஆட்சேபனையைக் கொண்டிருந்தது. ஆண்களினுடைய கொடூரமான நடவடிக்கைகளுக்கும், துரோகத் தனங்களுக் சமூகத்தினுடைய இரட்டைத்தன்மை வாய்ந்த போக்குகளுக்கும் எதிரான ஆட்சேபனையாக இந்த நாவல் இருந்தது. கொல் உயர் வர்க்கப் பெண்ணாக இருந்தவர். அதனால் நாவலும் உயர்தரவர்க்கப் பெண்கள் பற்றியதாகவே இருந்தது. இவர்கள் க வசதி பெற்றவர்களாகவும், தன்நம்பிக்கை உடையவர்களாகவும் இருந்தனர். அதனால் பெண்கள் இயக்கத்துக்கான ஒரு மை புள்ளியாக இவர்கள் அமைந்தனர். 1884இல் நோர்வேஜியப் பெண்கள் அமைப்பு உருவாக்கப் பட்டது. தங்களுடைய சஞ்சிகை 'புதிய பூமி'யின் மூலம் நாடு முழுவதிலுமுள்ள பெண்களை இவர்களால் சென்றடைய முடிந்தது. 1900களில் நாடு தழுவிய ரீதி பெண்களமைப்புக்கள் பரவலாக உருவாக்கப்பட்டன. பெண்களின் இந்த எழுச்சிகள் பத்திரிகைகளில் கேலிச் சித்திரங்கள் மூ ஏளனப் படுத்தப் பட்டன. பெண்களியக்கத்தின் முன்னணிப் பிரதிநிதியான ஒஸ்டா கன்ஸ்ரின் தெருக்களில் விடலைகளால் தொந்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செய்யப் பட்டார். தலைநகரத்து வீதிகளில் தற்பாதுகாப்பிற்காக குதிரைச் சாட்டையை அவர் எடுத்துச்செல்ல நேர்ந்தது. இத்தகைய நடவடிக்கைகளினால் பெண்களமைப்பு பின்வாங்கி விடவில்லை. அவர்கள் இதனை தங்களை நோக்கி விடுக்கப்பட்ட சவாலாகவே நோக்கிச் செயற்பட்டனர்.

## வாக்குரிமை

பெண்கள் அமைப்பு ஆரம்பிக்கப்பட்ட முதல் பத்து வருடங்களிலும் நாட்டின் அரசியலைத் தீர்மானிக்கக் கூடிய வாக்குரிமைக்காகப் போராடுவது பிரதான விடையமாக இருந்தது. அதற்கு கடுமையான எதிர்ப்புணர்வு மத நிறுவனத்தைச் சார்ந்த ஆண்களிடமிருந்தும், பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரிடமிருந்தும் வெளிப்பட்டது. அரசியல் விடையங்களில் ஈடுபடுவதற்குரிய அறிவாற்றல் பெண்களுக்கு இல்லை என்றும், இவ்வாறான கடுமையான வேலைகளைச் செய்வதற்காக இவர்களது மூளை படைக்கப் படவில்லை என்றும், இவற்றால் பெண் நோயாளியாவாள் என்றும் இவர்கள் வாதிட்டனர். பெண்களும் அரசியல் அதிகாரம் பெற்று விட்டால் ஆண்கள் தமது எல்லா அதிகாரங்களையும் இழக்க நேரிடும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. மதக்குருக்கள் பைபிளை முன்நிறுத்தி, ஒன்றுகூடலின்போது பெண்கள் அமைதி காக்க வேண்டும் என்றும், அரசியலில் அவர்கள் ஈடுபடுவார்களேயானால் அது கடவுளின் திட்டத்துக்கு விரோதமானது என்றும் வாதிட்டனர். ஆனால் பெண்களமைப்பு சமூகத்தின் அங்கத்தினராகிய ஆண் பெண் இருபாலாருக்கும் உரிமைகள் சமனாக இருக்க வேண்டும் என்றும், அதுவே முழுச் சமூகத்தின் நலனுமாக அமையும் என்றும் முன்வைத்தனர். அத்தோடு ஆண்களுக்குக் கிடைக்கின்ற அதேயளவு கல்வியும், வசதிகளும் பெண்களுக்கும் கிடைக்குமாக இருந்தால் இவர்களுக்கிடையில் அறிவிலும் ஆற்றலிலும் வேறுபாடுகள் இல்லை என்றும் எடுத்துரைத்தனர். ஆர்ப்பாட்டங்களையும், பொதுக்கூட்டங்களையும் நடத்தியதோடு ஆயிரக் கணக்கான பெண்களின் கையெழுத்துக்களையும், ஆதரவையும் திரட்டினர்.

பெண்களமைப்பின் இத்தகைய கோரிக்கைகளுக்கு ஆண்களும் ஆதரவு தெரிவித்ததோடு அவர்களுக்காகப் பாராளு மன்றத்திலும் பேசினார்கள். 1913இல் உலகிலேயே முதல் முறையாக முழுக் குடியுரிமை கொண்ட வாக்குரிமை பெண்களுக்கு வழங்கப் பட்டது.

## அரசியலில் பெண்கள்

அதேவேளை பெண்களுக்கான வாக்குரிமை கிடைத்தது என்பது பெண்கள் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டது என்று அர்த்தமாகாது. நாட்டின் தேசிய அவைக்குழுவில் முழுக்க முழுக்க ஆண்களே அங்கம் வகித்து வந்தனர். ஏறக்குறைய நூறு வருடங்களாக இந்த நிலமை தொடர்ந்தது. பெண்களியக்கம் 1970இல் இதையிட்டுத் தீவிரமாக இயங்கத் தொடங்கியது. அவர்கள் சொந்தக் குழுக்களை அமைத்து உள்ளூராட்சித் தேர்தலில் பெண்களும் தெரிவு செய்யப்பட வேண்டுமென்று போராடினார்கள். அரசியல் கட்சிகள் கோட்டா அடிப்படையில் பெண்கள் தெரிவு செய்யப்பட வேண்டும் என்ற ஒழுங்கை ஏற்படுத்தின. இதன்படி ஒவ்வொரு கட்சியும் குறிப்பிட்டளவு பெண்களை தங்களது தேர்தல் பட்டியலில் இணைக்க முடியும்.



1981இல் குருகார்லெம் புருந்த்லாண் நோர்வேயின் முதல் பெண் பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டமை வரலாற்றில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும். 1996இல் அவர் அரசியலில் இருந்து விலகும்வரை தனது மூன்று பதவிக் காலங்களிலும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரச ஆலோசனைக் குழுவில் கணிசமான அளவு பெண்களை இணைத்து உலக சாதனை ஏற்படுத்தினார். தொடர்ந்து வ காலங்களில் பதவிக்கு வரும் அரசுகள் இத்திட்டத்தைப் பேணும் வகையில் இந்த ஏற்பாடுகள் அமைந்திருந்தன. இன்று நோர் மிகவும் உறுதியான, சிறந்த பெண் அரசியல்வாதிகளைக் கொண்டுள்ளது. இவர்களால் ஆண்களைப்போன்று சிறப்பாகச் செயற் முடியாதெனச் சொல்பவர் மிகச் சிலரே.

## 1970இன் பெண்ணியம்

பெண்ணுரிமைப் போராட்ட வரலாற்றில் 1970கள் நோர்வேஜியப் பெண்களின் மிக முக்கியமான பத்து வருடங்களாகும். அமெரிக்கா பெண்களியக்கத்தால் கவரப்பட்ட புதிய பெண்ணியவாதிகளின் எழுச்சி இங்கே குறிப்பிடத் தக்கது. இவர்கள் சம்பிரதாயபூர்வம மாற்றங்களும், சட்டதிட்டங்களும் பெண்களின் விடுதலைக்கு போதுமானதல்ல; மாறாக சமூகத்தின் மனோநிலையிலும் மாற் வேண்டும் என்பதை வலியுறுத்தினர். நவீன பெண்களியக்கம் பெண்களினது உடல்மீதான நிலைப்பாடுகளில் கூடிய கவ செலுத்தியது. ஒரு பெண் தனது உடல் ரீதியான விடையங்களைத் தானே தீர்மானிக்கவும், இனவிருத்தி தொடர்பான சுயம முடிவுகளை எடுக்கவும் அவளுக்கு உரிமை உண்டென்பதை வலியுறுத்தியது. இங்கே நவீன பெண்களியக்கம் கருக்கலைப் தொடர்பாகப் புதிய சட்மொன்றை கோரி நின்றது. அதாவது பெண்ணே கருக்கலைப்பு சம்பந்தமான முடிவை எந்த கட்டாயமுமின்றி தானே எடுக்க வேண்டுமென்பது. மிகவும் கடுமையான போராட்டத்தின் பின்னர் 1978இல் புதிய கருக்கலை சட்டம் நடைமுறைக்கு வந்தது. இந்த வருடங்களில் வீட்டு வேலைகளில் பகிர்வு என்பதும் போராட்டத்தின் ஒரு அம்சமாக இருந்த நவீன பெண்களியக்கம் மிக நீண்ட நேரத்தைச் செலவு செய்கின்ற, உழைப்பாகக் கணக்கில் எடுக்கப் படாத வீட்டு வேலைக கவனத்திற்குக் கொண்டு வந்தது. இயற்கையாகவே இவைகள் பெண்களுக்கான வேலைதானா என்பதை கேள்விக்குள்ளாக்கிய அத்தோடு சரியான சந்தர்ப்பங்கள் கிடைக்குமிடத்து பிள்ளைகள் பராமரிப்பு ஆண் பெண் இருவருக்குமிடையில் நீதியான முறைய பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும் என்பதும், ஆண்கள் பிள்ளைகளைப் பராமரிப்பதில் அதிகளவு ஈடுபடும்போது குழந்தைக் தந்தைக்குமிடையில் ஏற்படும் உறவு பலமடையும் என்பது போன்ற கருத்துக்களை முன் வைத்தனர்.

நவீன பெண்களியக்கம் பெண்களுக்கான காப்பகங்கள் தொடர்பான பணிகளையும் பூர்வாங்கமாகத் தொடக்கி வைத்தது. ந முழுவதும் பெண்கள் பாதுகாப்பு நிலையங்கள் உருவாக்கப் பட்டன. இங்கே தங்களது காதலனால், கணவனால் பாதிக்கப்ப பெண்கள் தஞ்சம் அடைவதற்கு ஒரு இடமாகவும், பிரச்சனைக்குரிய தனது உறவிலிருந்து பெண் விலகிச் செல்வத உதவி செய்யும் இடமாகவும் காப்பகங்கள் செயற்படுகின்றன. இந்த பெண்களுக்கான காப்பகங்கள் சேவை மனப்பான் உள்ளவர்களாலும், உயர்ந்த இலட்சியங்கள் உள்ளவர்களாலும் நடாத்தப் படுகின்றது.

## நாடாளுமன்றப் பெண்ணியம்

நோர்வே எப்பொழுதும் மரபுரீதியான பரம்பரை வழக்கங்களுக்கு மதிப்பளிப்பதில் பெருமை கொள்ளும் நாடு. இந்தப் பண் பெண்கள் உரிமைக்கான போராட்டங்கள் சட்ட ரீதியாகவும், நாளாந்த வாழ்விலும் வெற்றி பெறக் காரணமாய் அமைந்ததெனல நோர்வேப் பெண்ணியவாதிகள் பெண்களின் நலன்களுக்காக அதிகமான சீர்திருத்தப் பணிகளை மேற்கொண்டனர். இவ்வாற மாற்றங்களாக; மகப்பேற்றுக் காலங்களில் சம்பளத்துடனான விடுமுறை, குழந்தை நோயுறும்போது விடுமுறை எடுக் உரிமை, ஒடுக்குமுறைகளுக்கெதிரான சட்டரீதியான பாதுகாப்பு என்பவற்றைக் குறிப்பிடலாம். நோர்வே 1978ல் கல்வியி தொழிலும் பால்ரீதியான ஒடுக்குமுறையைத் தடுக்கின்ற 'சம உரிமைச் சட்டத்தை' ஏற்படுத்தியது. அவ்வாறு யாராவது தாங் ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்படுகின்றோம் என்று கருதுமிடத்து சமஉரிமைக்கமிஷனில் முறையீடு செய்ய முடியும்.

## நோர்வேஜிய ஆண்கள்

தமது ஜனநாயக ரீதியான பண்புகளுக்கும், மாற்றமடைந்த சூழ்நிலையை ஏற்றுக் கொள்வதற்கும் அதற்கு மதிப்பளிப்பதற் நோர்வேஜிய ஆண்கள் பாராட்டப்பட வேண்டியவர்களாகின்றனர். அவர்கள் வீட்டு வேலைகளிலும் குழந்தைப் பராமரிப்பி கணிசமானளவு பங்கெடுக்கின்றார்கள். எனினும் இவற்றிற்காக பெண்கள் செலவு செய்யும் நேரத்தைவிட இவர்கள் ஈடு கொள்ளும் நேரம் குறைவாகவே உள்ளது. தந்தையர்க்கான மகப்பேற்று விடுமுறை குழந்தையுடனான தொடர்பை மிக இறுக்கமடையச் செய்வதற்கு நல்ல வாய்ப்பாக அமைகின்றது. இன்று அனேகமான தந்தையர்கள் பெருமிதத்தோடு குழந்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ண்டிகளை வெளியில் தள்ளிச் செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது. இது அவர்களது பேரன்கள், பாட்டன்கள் காலங்களில் பண்ணின் வேலையாகவே கருதப்பட்டது.

## இன்று

ன்னமும் சிறு குழந்தைகளின் தந்தையர்கள்தான் மேலதிக வேலைகளில் (Overtime) ஈடுபடுகிறார்கள் பெண்கள் பெரும்பாலும் குதிநேர வேலை செய்வதோடு வீட்டிலுள்ள அனைத்துப் பொறுப்புக்களையும் சுமக்கின்றார்கள். சம உரிமைச் சட்ட அரசியலும் ரம்பரியமாகப் பெண்கள் செய்கின்ற மருத்துவத்தாதி வேலையையே தெரிவு செய்கின்றது. பால்ரீதியான தொழில்வேறுபாடு ன்னமும் இடம்பெறுகின்றது. உணவுக்கட்டுப்பாட்டு நிறுவனங்களில் மிகக் குறைந்த பெண்களே தலைமைப் பதவிகளில் பணி ரிகின்றனர். இந்த நிலமையைச் சீர்ப்படுத்துவதற்கு, அதிகளவான பெண்களை நியமிப்பதற்கு கோரிக்கை விடுப்பதன்மூலம் ர்ப்படுத்த முனைகின்றனர். பொதுவாக பெண்களைவிட ஆண்களே கூடியளவு வருமானம் பெறுகின்றனர். பால்ரீதியான வேறுபாடும், பண்கள் பகுதிநேர வேலைகளில் ஈடுபடுவதும் இத்தகைய நிலைமைகள் தொடர்வதற்கு காரணமாகின்றன. ஒரேவிதமான வலையில் ஆண்களுக்கு அதிகளவான ஊதியமும், அதிகமான ஊக்குவிப்புத் தெகைகளும், சிறப்பான வேலை ஒப்பந்தங்களும் ிடைக்கின்றன.

சாந்த வாழ்வில் விவாகரத்துச் செய்பவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதை புள்ளி விபரங்கள் காட்டுகின்றன. திருமண ஒப்பந்தங்கள் செய்யாது சேர்ந்து வாழ்வோரில் அதிகமானோர் பிரிந்து போகின்றனர். அதற்கு என்ன காரணம்?, இதற்கு என்ன செய்யலாம்?



'கவர்ச்சியான தோற்றமும், சிறந்த உடற்கட்டமைப்பும்' என்ற நிலைப்பாடு இளம் பெண்களுக்கும், பெண்களுக்கும் பல பிரச்சனைகளைத் தோற்றுவித்துள்ளது. இளம் பெண்ணியவாதிகள் மிகக் கூடியளவில் பெண்களது உடல் சம்பந்தமான விடையங்களில் அதிக கவனம் செலுத்துகின்றனர். வேலைத்தலங்களில் அதிகரிக்கும் நிபந்தனைகள் குழந்தைகளையுடைய குடும்பத்தினர்க்கு மிகப்பெரிய அழுத்தத்தைக் கொடுக்கின்றது.

புதிதாக வெளிநாட்டவர்களின் வருகை நோர்வேயின் பெண்கள் சம உரிமைக்கு ஒரு சவாலாக அமைந்துள்ளது. இந்தப் பிரச்சனைகளையே சர்வதேசப் பெண்கள் தினத்தில் முன் நிறுத்திச் செயற்பட வேண்டிய தேவை உள்ளது. இங்கு லசுண்ட் நகரத்தில்) பல வருடங்களாக சர்வதேச கலாசார நிலையம் பெண்கள் தினத்தை நினைவு கூர்ந்துள்ளது. (தற்போது ந்த சர்வதேச கலாசார நிலையமும் மூடப்பட்டு விட்டது. ஆ.ர்) இந்த பெண்கள் தினத்தில் பல நாடுகளைச் சேர்ந்த பெண்களும் லந்து கொண்டு சிறப்பித்திருக்கிறார்கள்.

வவ்வேறான கால கட்டங்களில் வேறுபட்ட சவால்களுக்குப் பெண்கள் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. பெண்களமைப்புக்கள் த்தகைய சவால்களை பெண்கள் தினத்தில் முதன்மைப்படுத்தி செயற்பட வேண்டும். எதிர்காலத்தில் நிச்சயமாக இச் சயற்பாடுகள் தொடர வேண்டிய கட்டாயம் எம்முன்னேயுள்ளது. ■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பூட்டிய கதவினுள்ளே...

-பானுபாரதி-





உலகிலேயே பெண்ணுரிமையைப் பேணுகின்ற நாடுகளில் சிறந்ததெனக் கருதப்படும் நோர்வேயில் பெண்கள் மீத வன்முறைகள் அதிகமாகவே இடம் பெறுகின்றன. மேலெழுந்தவாரியாகப் பார்க்குமிடத்து எதுவித பிரச்சனைகளுமில்ல என்ற தோற்றப்பாட்டைத் தருகின்ற போதிலும், எண்ணிலடங்காத துன்பியல் நாடகங்கள் திரைமறைவில் தொடர்கின்ற பெண்கள் உலகின் எந்த மூலையில் வாழ்கிறார்களோ, எந்த வயதுடையவர்களாக இருக்கின்றார்களோ, சமூகத்தில் எத்தகை அந்தஸ்த்தைக் கொண்டிருக்கிறார்களோ என்பதை விடுத்து வன்முறைக்கு எல்லாத் தரப்பினரும் பெண்ணென்ற வகைய ஆளாகத்தான் செய்கின்றனர். உலகிலேயே மூன்றிலொரு பங்கு பெண்கள் தங்கள் வாழ்க்கைக் காலத்திற்குள்ளேயே பாலிய மற்றும் வெவ்வேறு விதமான வன்முறைகளுக்கு ஆளாகின்றனர்.

"எனது வீட்டிற்குள் என்ன நடக்கின்றது என்பதை எவராலும் அறிந்துகொள்ள முடியாது. எனது வலிகளை நான் மட்டு தனித்து அனுபவிக்க வேண்டியவளாக இருக்கின்றேன்" வன்முறைக்குள்ளான பெரு நாட்டைச் சேர்ந்த பெண்ணின் குமுறல் இ வன்முறையினால் ஏற்படும் உடல் உளவியல் தாக்கங்கள் சமூகத்துடனான பெண்ணினது இணைவை, தொழிற்பாட்டைத் த செய்கிறது.

நோர்வேயில் மட்டும் வருடத்தில் 5000 பெண்கள் உதவி கோரி பெண்கள் காப்பகத்திற்குச் செல்கின்றனர். இந்த எண்ணிக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதிகரித்துச்செல்வது அதிர்ச்சி தரும் விடையமாகும். பாதுகாப்பாக இருக்க வேண்டிய வீடு பெண்களுக்கு சித்திரவதைக்கூடமாக மாறிவிட்டது. வீட்டிற்குள்ளேதான் மோசமான அத்துமீறல்கள் நடந்தேறுகின்றன. அநேகமான வன்முறைகள் கணவனால், காதலனால் அல்லது முன்னைய கணவனாலோ அல்லது கூடி வாழ்ந்தவனாலோ மேற்கொள்ளப் படுகின்றது. வீட்டிற்குள்ளே இடம்பெறும் வன்முறைகள் எப்போதும் சொந்தப் பிரச்சனைகளாகவே பார்க்கப்பட்டு வந்துள்ளது. 1979ம் ஆண்டு ஐக்கியநாடுகள் சபையின் பெண்கள் மாநாட்டில்; 'பெண்கள்மீதான வன்முறை மிகப்பெரிய மனித உரிமை மீறலென்றும், அதன்படி அது தண்டனைக்குரிய குற்றமாக ஆகின்றது எனவும், இதற்கு எதிரான நடவடிக்கைகள் சட்டத்தினால் கடுமையாக மேற்கொள்ளப்பட வேண்டும்' என்றும் கூறப்பட்டது.

"பெண்கள் மீதான வன்முறை மிகப்பெரிய மனித உரிமை மீறலாகும். இந்த நிலைமைகள் தொடர்ந்துகொண்டிருக்கும்போது சமஉரிமை, அபிவிருத்தி, அமைதி போன்ற விடையங்களில் நாங்கள் முன்னேறியுள்ளோம் என்று எங்களால் உரத்துச் சொல்ல முடியாது" என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் Kofi Annan கூறுகின்றார்.

கடந்த வருட இறுதிப் பகுதியில் நோர்வேயில் பெண்கள் மீதான வன்முறைகளுக்கெதிரான குரல்கள் ஓங்கி ஒலித்தன. நோர்வே அரசும் அரசியல்வாதிகளும் இன்னும் பல்வேறு அமைப்புக்களும் நாடு தழுவிய ரீதியில் வன்முறைகளுக்கெதிரான பிரச்சாரங்களை மேற்கொண்டிருந்தனர். வன்முறைகளுக்காளான பெண்களுக்கு உதவுமுகமாக தொலைக்காட்சி மூலம் ஆதரவுப்பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொண்டதோடு நிதி சேகரிப்பு முயற்சிகளையும் மேற்கொண்டனர். இந்த நேரத்தில் வன்முறைக்குள்ளான பெண்ணொருவர் தனது அனுபவத்தை இந்த ஆதரவுப்பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொண்ட அமைப்புக்களுடன் கடிதமூலம் பகிர்ந்து கொண்டார்.




"எனக்கு நிகழ்ந்த வன்முறையை என்னைச் சுற்றி இருப்பவர்களிடம் மறைத்து விட்டேன். இது ஒரு பொதுவான குடும்ப வேலைத்திட்டம் போன்றது. எனது குழந்தைகளும், எனது முன்னைய கணவனும் இந்த இரகசியத்தைப் பாதுகாக்கின்றனர். வன்முறைக்கு அடுத்த நாள் அது மறக்கப்பட்டுவிடும். நாங்கள் அதுபற்றி பின்பு எப்போதும் பேசுவதில்லை. கடந்த இரவின் அத்துமீறல், அடி உதைகள், வீட்டுத் தளபாடங்களுடன் தள்ளிவிடல், படிகளில் தள்ளி விழுத்துதல், வயிற்றில் உதைத்தல், காதுகளுக்குள் உரத்துக் கத்துதல், மூச்சுத் திணறும்படி முகத்தைத் தலையணையால் மூடி நெரித்தல், துப்பாக்கியினாலும், கத்தியினாலும் குறிவைத்து மிரட்டுதல், எனக்குமேலே வலி அதிகரிக்கும்படியான நிலைகளில் ஏறியிருத்தல், குளிருறைந்த இரவுகளில் ஆடைகளற்று வெளியே தள்ளிவிடல், தற்கொலை மிரட்டல்கள் இத்தனைக்கும் மத்தியில் நான் எவ்வாறு வேலைக்குச் செல்வது? குடும்ப விழாக்களில் கலந்து கொள்வது எப்படி? அவன் என்னை அடிக்கும்போது முகத்தில் படாதவாறு கவனமாக இருப்பான்.

நீங்கள் எல்லோரும் இந்த விடையத்தில் தீவிரமாக ஈடுபட்டிருப்பது குறித்து எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களது இந்த நடவடிக்கைகள் பெண்கள் மீதான வன்முறையை ஒரு சமூகப் பிரச்சனையாக முன்நிறுத்தியுள்ளது. இந்த செயற்பாடுகளை இத்தோடு நிறுத்தாமல் இந்தப் போராட்டத்தை நீங்கள் முன்னெடுக்க வேண்டும். எனக்கும், என்போன்ற சூழ்நிலையிலுள்ள உலகிலுள்ள அனைத்துப் பெண்களுக்காகவும் இந்தப் போராட்டம் தொடர வேண்டும்."

நோர்வேயில் நடுத்தர வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் (40 - 60) தரகு நிறுவனங்கள் மூலம் கிழக்கு ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த பெண்களைத் திருமணம் செய்து கொள்கின்றனர். இவ்வாறு வருகின்ற பெண்களின் வாழ்க்கை மிகவும் மோசமான சீரழிவுக்கு உள்ளாகின்றது. இவர்கள் தங்கள் நாடுகளில் சிறந்த கல்வித் தகமைகள் உடையவர்களாகவும், நல்ல தொழில் வாய்ப்புக்கள் கொண்டவர்களாகவும் இருந்திருக்கிறார்கள். பொருளாதார நல்வாழ்வு என்ற எதிர்பார்ப்போடு இங்கு வரும் இவர்களுக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிடைப்பதெல்லாம் ஏமாற்றமே. புதிதாக மொழி கற்றுக்கொள்ள வேண்டி ஏற்படுவதும், அந்தந்த நாடுகளின் கல்வித் தகமைகள் இங்கு அங்கீகரிக்கப் படாததும் இவர்களது வாழ்க்கையைப் பெரும் சிக்கல்களுக்குள் தள்ளி விடுகின்றது. குடும்ப வாழ்கை இவர்கள் எதிர் பார்ப்பது போன்று சுதந்திரமானதாகவோ, அந் நியோன் யமானதாகவோ அமைவதில்லை. இங்கு வந்து இரண்டொரு வருடங்கள் கழிந்தபின் அவர்களது வாழ்வு கேள்விக்குறியாகின்றது.



உக்ரெய்னைச் சேர்ந்த இளம் பெண்ணான எலேனாவை அண்மையில் சந்தித்து உரையாடியபோது தெரியவந்த அவர் பற்றிய தகவல்கள்: எலேனா பொருளியல் படித்தவர். நிறுவனமொன்றில் தொழில் புரிந்துகொண்டிருக்கையில் அதனை இடை நிறுத்தி திருமணம் செய்து இங்கு வந்து விட்டார். எலேனா தனது செலவுகளுக்காக 60வயதான கணவனிடம் பணம் கேட்பதற் தயங்குவதாகக் கூறுகின்றாள். தனது சொந்த நாட்டில் தொழில் வாய்பைத் திறந்து இங்கு வந்து சேர்ந்தது பற்றி நிறைய துயருறும் எலேனாவிற்கு நோர்வேயின் பெண்கள் பாதுகாப்பகம் பற்றி எந்தத் தகவல்களும் தெரிந்திருக்கவில்லை. ஒரே வீட்டி இரண்டு அந்நியர்கள் போல் தனது கணவனுடன் தான் வாழ்வதாக குமுறுகிறாள்.

இவளைப்போன்றே ரஷ்யாவைச் சேர்ந்த ஒல்காவைச் சந்தித்தபோது: தான் மருத்துவராகத் தனது நாட்டில் பணி புரிந் கொண்டிருந்தவள் என்றும், திருமணத்தின் நிமித்தம் நோர்வேக்கு இடம் பெயர்ந்ததாகவும், இப்போ திருமணமாகி இரண் வருடங்களில் கணவனால் வீட்டை விட்டு துரத்தப் பட்டதாகவும் கூறுகிறார். வீட்டை விட்டு கணவனால் விரட்டப்பட்ட அவளி வதிவிட அனுமதியோ, பணமோ எதுவுமே இல்லாத நிலை.

பிலிப்பைன்ஸ், தாய்லாந்து போன்ற நாடுகளுக்கு முதிய நோர்வேஜிய ஆண்கள் சென்று அதிகளவான இளம் பெண்களை திரும ஒப்பந்தம் செய்து இங்கு அழைத்து வருகின்றனர். இதே போன்ற திருமண ஒப்பந்தங்களுக்காகவென உள்ள தரகு நிறுவனங்க மூலமும் இப்படியான இளம் பெண்கள் இங்கு வரவழைக்கப் படுகின்றனர்.

பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த இளம் வயதுடைய தெரேசா இவ்வாறு கூறுகிறாள்:
இந்த நோர்வேஜிய ஆண்களுக்கு, ஆசியாவில் பெண்கள் வீடுகளில் எவ்வாறு நடத்தப் படுகிறார்கள் என்பது நன்றாகவே தெரிய எனது நாட்டில் நான் எப்படி இருப்பேனோ அப்படியே இங்கும் நான் இருக்க வேண்டும் என்பது எனது கணவனின் எதிர் பார்ப்ப இருக்கிறது. உண்மையில் நோர்வே வந்தபின் எந்தவித வேறு பாட்டினையும் நான் உணரவில்லை.


நோர்வே உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள் பெண்களுக்கான சமஉரிமைச் சட்டங்களையும், சட்டரீதியான வசதிகளையும் கமி ன்களையும் இயற்றினாலும், நியமித்தாலும், அமுலாக்கினாலும் அவற்றின் பலாபலன்கள் பரந்துபட்ட ரீதியில் இங்குள் பெண்களை முழுமையாகச் சென்றடையவில்லை என்பதே உண்மை. அதிலும் குறிப்பாக நோர்வேயில் வாழும் வெளிநாட் பெண்களுக்கு இவை பற்றிய போதிய தகவல்கள் எட்டவில்லை. நடைமுறையிலுள்ள இத்தகைய சட்டங்கள் முழுமையா முறையில் பயன்படுத்தப்படும்போதுதான் பெண்கள் மீதான வன்முறைகளும் குறைய வாய்ப்பிருக்கின்றது. முன்னேறியதாக கருதப்படும் இந்த நாடுகளில் ஏன் இவ்வாறான நிலைமை தொடர்கிறது என்று ஆராய்வோமானால், இந்த மாற்றங்கள் ஒ சம்பிரதாயபூர்வமான மாற்றங்களாகவே இருக்கின்றன. சமூகத்தின் அடிப்படையான கருத்து நிலைகளில் மாற்றம் ஏற்படவில்லை எனில் பெண்விடுதலைக்கான போர் அடிப்படையில் சமூக விடுதலையுடன் பின்னிப் பிணைந்துள்ளதைத் தெளிவாக உணர முடிய ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விடைபெறக் காத்திருக்கிறேன்!



தோழர் புஷ்பராஜா

நன்றி: ஆனந்தவிகடன்

எப்போதும் மரணத்தின் நிழல் படிந்திருக்கும் ஈழத்தின் தெருவொன்றில் பிறந்தவன் நான். குழந்தைகளும் இளம்பெண்களும் முதியவர்களும் கொடூரமாகக் கொல்லப்படுவதைக் கண்ணெதிரே கண்டிருக்கிறேன். வாசலில் சாவை அமர்த்திவிட்டுதான் உள்ளே உறங்கச் செல்லுகிறார்கள் எம் மக்கள். செத்துச் செத்து வாழ்கிற எங்களுக்கு மரணம் புதிதில்லை. இதோ இன்னும் மூன்று மாதம்தான் எனக்கு ஆயுள் என்று மருத்துவர்கள் சொல்லி விட்டார்கள். அதற்காக நான் பயப்படவில்லை. வருத்தப்படவில்லை. ஆனால் ஒரு முக்கிய வேலை இருக்கிறது. அதற்கு இன்னும் எட்டு மாதம் நான் வாழ்ந்தாக வேண்டும். உயிர் வாழ்தலின் இறுதி முயற்சியாகத்தான் சென்னைக்கு வந்திருக்கிறேன் என்கிறார் புஷ்பராஜா. ஈழத்தின் ஆயுதப் போராட்டத்தைத் துவக்கி வைத்த முன்னோடிகளில் ஒருவர். இப்போது அரசியல் தஞ்சமடைந்து பிரான்ஸில் வசிக்கிறார்.

யாழ்ப்பாணம் மயிலிட்டிதான் என் சொந்த ஊர். எழுபதுகளின் துவக்கத்தில் சிங்களப் பேரினவாதத்தின் அடக்கு முறைகளை எதிர்கொள்ள ஈழத்தமிழ் இளைஞர்கள் ஆயுதங்களை நோக்கித் திரும்பிய காலம். சிங்கள ஆதிக்கத்தை எதிர்க்க அஹிம்சை உதவாது ஆயுதம்தான் உதவும் என்று முடிவெடுத்து அதுவரை நான் இருந்த தமிழ் அரசு கட்சியிலிருந்து விலகி தமிழ் மாணவர் பேரவை என்கிற அமைப்பை நானும் சிவக்குமாரன் சத்யசீலன் போன்ற சில நண்பர்களும் சேர்ந்து துவக்கினோம்.

ஈழ விடுதலையில் ஆயுதப் போராட்டத்தை முதன்முதலாகத் துவக்கி வைத்தது மாணவர் பேரவைதான். பின்னர் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் உறுப்பினராகவும் போராளியாகவும் இருந்தேன். அதே காலகட்டத்தில் ஈரோஸ், டெலோ, புளொட், பி.எல்.ஓ.டி., ஈ.என்.டி.எல்.எ.ஃ.ப், தமிழ் புதிய புலிகள் என ஏழெட்டு அமைப்புகள் ஈழத்தில் முளைத்தன.

காக்கைகளுக்கு முன்பே நாங்கள் விழித்தெழுவோம். எமது மக்களின் உண்மையான விடுதலைக்கு எதிரியாக இருந்த சிங்களவர்களைத் தேடி அலைவோம். போர்ப் பயிற்சிக்காக பல்வேறு குழுக்களும் பாலஸ்தீனத்துக்கும் இந்தியாவுக்கும் போயின. எல்லோருக்கும் ஆயுதம் கிடைத்தது. தமிழகத்திலும் வட இந்தியாவிலும் எங்களுக்குப் பயிற்சி கொடுக்கப்பட்டது. வேதாரண்யத்தில் எங்களைக் கொண்டுவிடவும் அழைத்துப்போகவும் படகுப் போக்கு வரத்து குறிப்பிட்ட நாட்களில் இருந்தது. எல்லோரும் ஈழ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடுதலைக்காகப் போராடினோம். எனினும் நாங்களும் மற்ற ஆயுதக் குழுக்களும் விடுதலை பற்றிய தத்துவக் கோட்பாட்டில் தெளிவில்லாமல் இருந்தோம். இது சகோதரக் கொலையில் கொண்டு போய் எங்களை நிறுத்தியது. எங்களுக்குள் முரண்பாடுகள் இருந்தன. வேறு வேறு குழுக்கள் வேறு வேறு தத்துவங்களைக் கொண்டு இருந்தன. ஆனால் அடிப்படைக் கொள்கை ஒன்றுதான்... அது தமிழ் ஈழம் அடைவது!

எண்பதுகளில் தொடங்கி இன்று வரை ஈழத்தில் சகோதர யுத்தத்தில் கொல்லப்பட்டவர்கள் மட்டும் கிட்டத்தட்ட 6000 பேர். சுடப்பட்டும் மின்சாரக் கம்பங்களில் தொங்கவிடப் பட்டும் கொலை செய்யப்பட்ட இந்தப் போராளிகளெல்லாம் யார்? சிங்களர்களா? இலங்கை ராணுவத்தினரா? இல்லை சுதந்திரத் தமிழ் ஈழத்துக்காகத் தங்களின் வீட்டை, சொந்தங்களைத் துறந்து ஆயுதம் தரித்தவர்கள். ஈழத்துக் கவிஞர் சிவசேகரத்தின் கவிதை ஒன்று...

*துரோகி எனத் தீர்த்து*

*முன்னொரு நாள் சுட்ட வெடி*

*சுட்டவனைச் சுட்டது*

*சுடுமாறு ஆணை*

*இட்டவனைச் சுட்டது*

*குற்றஞ் சாட்டியவனை*

*சாட்சி சொன்னவனை*

*தீர்ப்பு வழங்கியவனைச்*

*சுட்டது*

*தீர்ப்பை ஏற்றவனைச்*

*சுட்டது*


*சும்மா இருந்தவனையுஞ்*

*சுட்டது.....*

இப்படி ஒரு சூழலில்தான் நானும் கொலை செய்யப்படுவேன் என்று பயந்தேன். ஒன்று என் எதிரிகளால். இன்னொன்று ஆயுதம் தரித்த என் நண்பர்களால். இது கொலைகாரங்க பூமி ஆயிடுச்சு. நாம இனிமே இங்கே இருக்க வேண்டாம். வேற எங்காவது போயிடலாம் என்று என் காதலி சொன்னாங்க. அதற்கு அடுத்த நாள் அதாவது 82ம் ஆண்டு மே மாதம் திருமணம் செய்துகொண்டோம். என் உடன்பிறந்தவர்கள் ஒன்பது பேர். அழகான கூடு மாதிரி இருந்தது வீடு. அந்த கூட்டை நானேதான் கலைத்துவிட்டு என் மனைவியோ பிரான்ஸுக்கு வந்தேன். இதோ 24 ஆண்டுகளாகிவிட்டன.

உலகத்தின் எந்த மூலையில் சுற்றி அலைந்தாலு தாயகக் கனவு என்னை அலைக் கழித்துக்கொண்டேதா இருந்தது. தேவைக்கு அதிகமாகக் காசிருந்தால் குடிப்பே போதை நிறைய விஷயங்களை மனந்திறந்து பேசவும் கூடி கதைக்கவும் ஒரு வாய்ப்பை ஏற்படுத்துவதாக இருந்த கிடைக்கிற வேலையெல்லாம் செய்தோம். ஈழத்தின் சாதி சமூகம் எந்தெந்தத் தொழிலை எல்லாம் செய்யக் கூடா தொழிலாக விலக்கி வைத்ததோ அதையெல்லாம் செய்தோம்

தாய் மண்ணைத் தொலைத்து புதிய சூழலில் புதி உறவுகளை நாங்கள் தேடிக்கொண்டோம். என்னுடை வாழ்க்கையின் பெரும்பாலான நாட்களை இப்படித்தான் அந்நி மண்ணில் கழிக்க நேர்ந்தது என்று உலர்ந்த உதட்டை ஈரப்படுத்திக்கொண்டு தொடர்ந்து பேசுகிறார் புஷ்பராஜா.



கடந்த ஜனவரி மாதம் பொங்கல் அன்று எனக்கு கடுமையான வயிற்று வலி. அதை நான் பெரித எடுத்துக்கொள்ளவில்லை. இரண்டு நாள் கழித்து மீண்டு மிகக் கடுமையான வலி வயிற்றைப் பிடுங்கி எடுக் பிரான்ஸில் உள்ள மருத்துவமனைக்குப் போனேன். டாக் என்னைச் சோதித்துவிட்டு உங்களுக்கு வேண்டியவர்க எங்கிருக்கிறார்கள்? என்று கேட்டார். எனக்கு என் நிலைமை புரிந்துவிட்டது. பின்பு உங்கள் கல்லீரல் புற்றுநோயா முழுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்றார். என் மனைவியு குழந்தைகளும் கதறி அழுதார்கள். என் முப்பத்தைந் வயதில் என் அம்மாவும் அப்பாவும் இறந்தபோதுகூட நா என் தாய் நாட்டுக்குப் போனது கிடையாது. போக வேண்டு என்ற எண்ணம்கூட வந்தது கிடையாது. மயிலிட்டி இப்போ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எப்படி இருக்கும் என்று எனக்குத் தெரியாது. என் எண்ணம் முழுக்க வேறொன்றில் இருந்தது.

ஈழ விடுதலைப் போராட்டம் பற்றிய வரலாற்று நூலை எழுதும் முயற்சி அது. ஈழப் போராட்டத்தில் எனது சாட்சியம் என்கிற நூலை எழுதியிருக்கிறேன். அடுத்ததாக இன்னும் இரண்டு நூல்களை எழுதலாம் என்று நினைத்திருந்தேன். ஒன்று ஈழப் போராட்டத்தில் பெண்களின் பங்கு. இன்னொன்று சிங்கள ஆட்சியாளர்கள் காலங்காலமாகத் தமிழர்களின் உரிமைகளை எப்படியெல்லாம் காலில் போட்டு மிதித்தார்கள்... தமிழ்த் தலைவர்கள் என்று சொல்லிக்கொண்ட சிலர் எப்படி சிங்கள ஆட்சிக்குத் துணை போனார்கள் என்பதை எழுத ஆசைப்பட்டேன். அதற்குக் குறைந்த பட்சம் இன்னும் எட்டு மாதங்களாவது நான் உயிரோடு இருக்க வேண்டும்.

இங்கே, சென்னையில் ஒரு மருத்துவமனைக்குப் போயிருந்தேன். அங்கே என்னைப் போல் கேன்சர் நோயாளிகள் நிறைய பேரைப் பார்த்தேன். சின்ன குழந்தைகள் இளம்பெண்கள் என ஏராளமானோர் வெளியில் தங்களுக்கான தீர்ப்பைப் பெற்றுக்கொள்ளக் காத்திருந்தார்கள். அங்கிருந்த சிலரிடம் பேசியபோது நான் எவ்வளவோ பரவாயில்லை என்று தோன்றியது.

நான் மருத்துவரீதியாக இப்போது சில முயற்சிகளை எடுத்திருக்கிறேன். அது வெற்றி பெறுமா, தோல்வியுறுமா... தெரியவில்லை. நான் இன்னும் நம்பிக்கை இழக்கவில்லை. என் வீட்டார் கடவுளை நம்புகிறார்கள். இதுதான் உலகம் இப்படித்தான் வாழ்க்கை என்று விவரம் தெரியத் துவங்கிய காலத்திலிருந்தே எனக்குக் கடவுள் நம்பிக்கை கிடையாது. நான் பெரியாரிஸ்ட்!

தேதியை நிச்சயித்தபடி வரும் மரணத்தில் சில சௌகரியங்கள் இருக்கத்தான் செய்கின்றன. அடுத்து நாம் செய்ய வேண்டிய பணிகளைத் திட்டமிட்டு துரிதமாக முடிக்கலாம். எழுத விரும்புவதை எழுதலாம். சந்திக்க விரும்பும் நண்பர்களைச் சந்தித்து அளவளாவி மகிழலாம். ஆனால் என்ன ஒன்று... இன்னும் கொஞ்ச நாள்தான் இருக்கப் போகிறோம் என்பதால் ஆசை கட்டுக்கடங்காமல் நீண்டு கொண்டே போகிறது. இத்தனை ஆசைகளும் இவ்வளவு நாள் எங்கே இருந்தன என்று தெரியவில்லை. இறுதித் தேர்வை எழுதும் மாணவன் போல் என்னை உணர்கிறேன்.

எழுதலாம் என்று அமர்ந்தால் சோர்வாக இருக்கிறது. ஆனாலும் நான் விடாப்பிடியாக எழுதிக்கொண்டு இருக்கிறேன். நம்பிக்கை ஊக்கம் தருகிறதென்றால் மருந்துகள் வாட்டி வதைக்கின்றன. நோயாளியாக இருக்கிறோம் என்கிற உணர்வே ஒரு படபடப்பை ஏற்படுத்துகிறது. எனக்கு ஏற்கெனவே பைபாஸ் சர்ஜரி நடந்திருக்கிறது. இப்போது மாற்றுக் கல்லீரல் அறுவை சிகிச்சை செய்வதற்கான முயற்சிகள் நடந்துகொண்டு இருக்கின்றன. அதற்கு என் உடம்பு ஒத்துழைக்குமா என்று தெரியவில்லை.

ஈழத்தில் ஆயுதப் போராட்டத்தைத் துவங்கிவைத்தவர்களில் நானும் ஒருவன் என்கிற முறையில் ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். ஈழப் போராட்டத்தைப் பொறுத்தவரை, இன்றைக்குப் புலிகள் யாராலும் வெல்ல முடியாத ராணுவமாக இருக்கிறார்கள். இனி வருங்காலத்தில் ஈழச் சமூகத்தின் மீதான பெரும் பொறுப்பு புலிகளின் மீது சுமத்தப்பட்டு இருக்கிறது. ஒற்றை அமைப்பாக ஈழ விடுதலையைச் சுமக்கும் புலிகள்தான் எதிர்காலத்தில் ஈழத்தில் அமைதியையும் சுதந்திரத்தையும் கொண்டுவர வேண்டும். கடந்த காலத்தின் கசப்பான அனுபவங்களில் இருந்து புலிகள் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஈழத்தின் அருகில் இருந்து இந்தப் பிரச்னையைத் தீர்த்துவைக் வேண்டிய இந்தியா ஒதுங்கி நின்று வேடிக்கை பார்க்கிறது இதை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொண்டு இலங்கை பிரச்னையில் அமெரிக்கா தலையிட்டு ஆக்ரமிக்க முயலு எப்போதும் அந்நிய சக்திகளைவிட ஈழப் பிரச்னையி இந்தியா நேர்மையுடனும் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகவ தலையிடுவதைத்தான் போராளிகள் விரும்புவார்கள். எ விருப்பமும் அதுதான்! என்கிறார் புஷ்பராஜா.

கடைசியாக புஷ்பராஜாவுக்கு மாற்றுக் கல்லீரல் பொருத்து முயற்சியையும் அவர் உடம்பு தாங்காது என்பதா மருத்துவர்கள் கைவிட்டு அவரது கடைசி நாட்களை சொந் மண்ணிலேயே சென்று கழிக்கும்படி சொல்லிவிட்டார்கள்.

*எனக்கேது சொந்த மண்? நான் எங்கே செல் முடியும்? நாளை அமையவிருக்கும் தமிழ் ஈழத்தை காண நான் உயிரோடிருக்க மாட்டேன். நான் பிறந் மண்ணே... நான் வாழ முடியாத மண்ணே... ஒரே ஒ கேள்வி உன்னிடம்... வெடி மருந்து வீச்சமில்லாத உ தெருக்களில் எம் பிள்ளைகள் நடக்கின்ற நாள் என் வரும் எம் மண்ணே?*

# பழி சுமந்த மண்

சி.புஸ்பராஜா

அகலத்திறந்து வையுங்கள்
உங்கள் கதவுகளை
அல்லது உடைக்கப்படும்.
காக்க வந்தவர்கள், காப்பாற்ற வந்தவர்கள்
நியாயம் கேட்காதீர்கள்
கேட்டால் உதைக்கப்படுவீர்கள்.

உங்கள் உடைமைகள் மட்டுமல்ல
உயிர்களும்
பெண்களின் கவடுகளும்தான்
எடுக்கவும், அழிக்கவும், சிதைக்கவும்
எழுதாமல் பறிக்கப்பட்ட உயில்.

உங்கள் கதவுகள் உடைக்கப்படும்
காத்திருங்கள் - சுடும் உண்மைதான்.
உங்கள் பிஞ்சுகள் ஏற்றப்படுவார்கள் - ஆனால்
அவர்கள் திரும்பமாட்டார்கள்.

ஆட்டுக்காகக் கண்ணீர் விட்டவரின்
ஆட்களென - நம்பிவிடாதீர்கள்
உங்கள் கதவுகள் உடைக்கப்படும்.
தொலைதேசத்துக்கு
ஆத்மாக்கள் அனுப்பப்படும்.

காத்தல் விடுத்து
அழித்தல் கொண்ட யமனாகி
கௌதமதத்துவம்.... இரக்கம் பறிபோய்
கொடூரர் சித்தமாகி - இரத்தாறாய்
நாசமாய்ப்போன தேசமது.

-தோற்றுத்தான் போவோமா 1999-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# துன்பம் நேர்கையில்...

சிறுகதை

~கவிதா~



மணி அடித்துக்கொண்டே இருந்தது. சில அழைப்புகளுக்குப் பின் ஒரு றார்குரல் அவசரமாய் எடுத்தது.

ஹலோ"

கண்ணன் நான் மலர் கதைக்கிறன்"

சொல்லு.."

இரண்டரை மாசம் ஆகிட்டதால இண்டைக்கே வரட்டாம். நான் வேலைக்கு வரமாட்டன் எண்டு சொல்லிட்டன். நீங்க வேலைய அரைநாள் லீவு போட்டிட்டு மத்தியானம் போல வந்தீங்கண்டா, அபோஷ ன் முடிச்சு நானும் கண்முழிச்சிடுவன் "

ம். நான்தான்... நீயாவது கொஞ்சம்... கவனமாக இருந்திருக்கலாம்தானே. ற்கனவே அங்க நோ இங்க நோ எண்டு ாரியப்பிடிச்சுக்கொண்டு திரியிறாய்"

பிள்ளைகளும் வளந்திட்டினம்... வருசம் பிறந்ததும் அதுவும் மனசே சரியில்ல, இரண்டோட மூணாப் பெத்து வளப்பமே"

ச்சீ அதெல்லாம் அண்டைக்கே கதச்சு முடிவெடுத்தாச்செல்லா? இப்ப புதுசா ஒரு பிரச்சனையை கிளப்பாத. இப்பவே மனுசன் செத்துப் பிழச்சுக் கொண்டிருக்கிறான்... நீ போ. நான் இரண்டு மணிபோல வாறன்."

உலகத்தில் உள்ள அழுக்கெல்லாம் அவள் மேல் படிந்ததுபோல குளித்தாள். இரண்டு பிள்ளைகள் போதும் என்று இருவருமாய்த்தான் முடிவெடுத்தனர். இது மூன்றாவது. இரண்டு பிள்ளைகள் போதும் என்று முடிவெடுத்ததற்குப் பதிலாக இரண்டு கருக்கலைப்புக் காணும் என்று முடிவெடுத்திருந்தால் இதைப் பற்றி யோசிக்கலாம். கண்ணனிடம் இதைப்பற்றி விளக்குவது அவளுக்குக் கடினமாகவே பட்டது? அவள் விம்மியழுத கண்ணீர் குளித்த நீருடன் கலந்து கொண்டது.

வாழ்க்கை, குழந்தை, சந்தோசங்கள், பிரச்சனைகள் பற்றிய விளக்கங்களும் அளவுகோல்களும் அவனைப் பொறுத்தரை வேறு. தன்னைத்தான் அவள் மாற்றியாக வேண்டும். இதுதானே வழமை. அனாவசியமாக அவனுடன் மல்லுக்கு நிற்பதையேனும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தவிர்க்கலாம். யதார்த்தங்களைக் கூட சுமையென்று கூறுபவன். அவனது குத்தல்களுக்கு மருத்துவமனைக் கத்திகள் பரவாயில்லை என்றது மனம்.

மருத்துவமனைப் பேருந்து தரிப்பிடம். வசந்தம் விடைபெற்று குளிர்காலத்தின் முதல் பனி சாலைநெடுக கொட்டிக்கிடந்தது. அவளைச் சுற்றிய உலகம் முழுதும் வயிற்றைத் துளைக்கும் குளிர். தேசமெங்கும் காற்றின் ஊடுருவலோடு தூரக் கேட்டது இலையுதிர்ந்த கிளைகளில் பறவையொலிகள். அதோ பெரிய மருத்துவமனை. எத்தனை முறை வந்தாயிற்று. பெற இரண்டு. கலைக்க இரண்டு.
இது மூன்றாவது.

ஓட்டமும் நடையுமாக மருத்துவமனைக்குள் நுழைந்தாள். அந்த இடமே ஒரு மயானம் போலதான் இருந்தது. மூன்றாவது முறையாக இன்னொன்று.

விண்ணப்படிவம் நிரப்ப வேண்டும். இதெல்லாம் பழக்கப்பட்ட, இல்லை பாடமாக்கப்பட்ட விடயம்தானே கைகள் தானாகவே அனைத்தையும் நிரப்பி முடித்தன. என்ன, எத்தனையாவது முறை என்ற இடத்தில் மூன்று என்று மட்டும் மாற்ற வேண்டும். இதைப்படிக்கும் இந்த வைத்தியசாலையின் தாதியர்கள் என்ன நினைப்பார்கள் என்று ஒரு முறை மனம் சஞ்சலப்பட்டது. இந்த கசப்பான நேரங்களுக்கும் பெண்கள்தானே முகம் கொடுக்க வேண்டியிருக்கிறது. எங்கள் சமூக அமைப்பில்தான் இப்படியோ. இன்றைக்கேனும் கண்னன் முழுநாள் விடுப்பு எடுத்திருக்கலாம். என்னை அணைத்தபடி இந்த விண்ணப்பப் படிவத்தையாவது நிரப்பித் தந்திருக்கலாம்.

அவள் கண்முன்னே எல்லா ஏற்பாடுகளும்... கத்தி, கத்தரீ இன்னும் பெயர் தெரியாத ஆயுதங்கள். மயக்கம் தருவதாய்சொல்லி அவளை மயக்க மருந்தை சுவாசிக்கச் சொன்னார்கள். வெள்ளை நிறத்தில் பெரிதான வட்டம் ஒன்று சீராக வளைந்து வளைந்து சின்னதாகிப் போய் மறைந்து...அவளைச் சுற்றி மயான இருட்டாகிப் போனது.

இதோ சின்னதாய் ஒரு வெளிச்சம். அவள் கண்கள் திறபடுகின்றனவே....
தனித்து அறையொன்றில் படுத்தப்பட்டிருந்தாள்.
சீரில்லாத சுவாசம் சூடாயிருந்தது.
கனமான கண்ணிமைகள் மீண்டும் மூடிக்கொண்டன. உடல் ஓய்திருந்தது. கைகள் ஒருபுறமாய் கண்கள் மறுபுறமாய் ஆதரவைய் தேடியது. கண்ணன் இன்னும் வரவில்லை. அவள் நெஞ்சிலிருந்து வயிறுவரை வருடிவிட ஒரு கைவேண்டும் போல தாகம் எடுத்தது. தாதிப்பெண் ஏதாவது வேண்டுமா என்று கனிவாகக் கேட்டாள். கேட்டதுமே ஒரு தொலைபேசி தந்தாள். கூடவே கொஞ்சம் தண்ணீர் தட்டில் உணவு. அதே புன்னகையுடன் கதவைச் சாத்திச் சென்றாள்.
“கண்ணன் எங்க நிக்கிறீங்க?”

“வாறன் பொறு கார் ஓடிக்கொண்டிருக்கிறன். வை.”

மனம் தவித்துக்கொண்டேயிருந்தது. அரைமணி நே
காத்திருப்பிற்குப் பின் கண்ணன் உள்ளே வந்தான்.

“உனக்கு கொஞ்சம் கூட பொறுமை எண்ட சாமான் இ
மலர். எத்தன தரம் சொன்னனான் கார் ஓடேக்க டெலிபே
எடுக்காத என்டு. பிடிச்சா இப்ப ஐநூறு தெரியும்தானே.
என்னவாம் டொக்டர். நாளைக்கு வேலைக்குப் போகலாமா
இல்லாட்டி லீவு கேட்டு வாங்கு. கொதியா. இண்டை
ஓவர்டைம் வந்திருக்கு. உன்னை வீட்டை விட்டுட்டு உ
போகவேணும்.”

ஏதோ ஏமாற்றம் மனதில் தோன்றியதானாலும் அது வ
வழியே வலுவிழந்த புன்னகையாய்தான் வந்தது. பாரதிதா
பாடலொன்றை மெலிதான சத்தத்தில் “துன்பம் நேர்கைய
யாழ் எடுத்து நீ...” மனசு மீட்டிக்கொண்டது. முன்
செல்லுமவனை நோக்கிப் பின் தொடர்ந்தாள் மலர்.

“எத்தனை தரம்தான் கண்ணன் இப்படி வந்து படுக்கி
பேசாம கருத்தடை செய்தா என்ன என்று யோசிக்கி
டொக்கடர் பொம்பிளைகளுக்கு ஏதோ கருப்பை
எடுக்கிறதாம். கிட்டதட்ட ஒரு அங்கத்தை எடுக்கிற மாதிரிய
ஆம்பிளையளுக்கென்டா என்னவோ சொன்னவா. ஆ
ஆம்பிளையளுக்குச் செய்யிறதென்டா பெரிய கஷ்டமில்லைய
என்ன சொல்லுறீங்க”

“உனக்கென்ன விசரே... கொஞ்சம் கவனமா இருக்கி
விட்டுட்டு... என்ன கதைக்கிற. இதால என்னென்ன பாதி
வருமோ யாருக்குத் தெரியும். வீட்டை போய் நல்
ஓய்வெடு. நான் வந்து எல்லாம் செய்யிறன். இருக்கி
போட்டுச் சாப்பிடு. எனக்கு வைக்க வேணும் என்டு இ
சரியா. மலர், கருத்தடை செய்துதான் ஆக வேணும் என
அதையும் நீயே போய் செய்துகொள். எனக்கு அ
ஒரு பிரச்சனையுமில்லை. நான்தானே உன்ர முடிவுக
தலைப்போடுறேல்ல. இந்த காலத்தில இப்படி ஒரு புரு
கிடைக்க குடுத்துவைச்சிருக்கவேணுமடி... குடுத்துவைச்சிரு
வேணும்.”

கார் கதவைத் திறந்தாள். மெல்ல அவள் முகம் திரு
இதழில் முத்தம் பதித்து விடைபெற்றான்.
வெளியிலும் இருட்டிப்போயிருந்தது. ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாதுகாப்பற்ற கருக்கலைப்புக்களின் பலியெடுப்புக்கள்



-சகி-

சமீபத்திய கணக்கெடுப்பின்படி வருடாந்தம் 70 000 பெண்கள் பாதுகாப்பற்ற கருக் கலைப்பினால் மரணிக்கிறார்கள். பல்லாயிரக்கணக்கானோர் ஆபத்திற்குள்ளாகிறார்கள். உலக சுகாதார நிறுவனத்தின் வரையறுப்பின்படி கருக்கலைப்பிற்குத் தேவையான மிக முக்கிய தகமைகள் அற்றவர்கள் கருக்கலைப்புச் செய்வதாலும், குறைந்தபட்ச மருத்தவ வசதிகூட அற்ற இடங்களில் கருக்கலைப்பு நடை பெறுவதாலும், அல்லது இரண்டு காரணங்களாலும் கருக்கலைப்புக்கள் உயிராபத்துக்களில் முடிவடைகின்றன. வருடாந்தம் ஏறத்தாள 19மில்லியன் கருக்கலைப்புக்கள் பாதுகாப்பற்ற கருக்கலைப்புக்களாகப் பதியப் படுகின்றன. இதில் 96வீதமானவை வளர்முக நாடுகளிலேயே நடைபெறுகின்றன.

அதிகூடிய இரத்தப்போக்கு, கருப்பை வீக்கம், இரத்தப் பழுதடைவு, கருப்பையிலும், பிறப்பறுப்பிலும் ஏற்படும் சிராய்வுகள், காயங்கள் இதனால் இவ்வங்கங்களில் ஏற்படும் நுண்ணிய துவாரங்களினூடான நோய்த் தொற்றல்கள், மலவழி, உடலுட்கூறுகளில் ஏற்படும் தொற்று நோய்கள், காயங்கள் இதனால் இவ்வுறுப்புக்களின் தொழிற்பாடின்மை போன்றவற்றின்மூலம் இவ்வாபத்துக்கள் ஏற்படுகின்றன.

சர்வதேசக் குடும்பக் கட்டுப்பாட்டு ஸ்தாபனத்தின் (IPPF) கருத்துப்படி அமெரிக்க கருக்கலைப்பிற்கு எதிரான கொள்கையே இவ்வெண்ணிக்கை உயர்வுக்குக் காரணமாகும். ஒவ்வொரு வாரமும் ஆபத்தான பெண்ணுறுப்பு இரத்தப் போக்கிற்காக பிரேசில் நாட்டின் மிகப்பெரிய அரச மருத்துவ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மனையின் அவசரப் பிரிவில் பெண்கள் சேர்க்கப் படுகிறார்கள். இதில் பெரும்பாலானோர் தென்னாபிரிக்காவின் மிகப்பெரிய நகரத்திலுள்ள வறுமையான பகுதிகளில் வாழும் இளம் (13 - 23) வயதினராகும். இதில் சிலர் தமது இரத்தப் போக்கிற்கான காரணம் என்னவென்றே தெரியாது என்றும், சிலர் மாதவிடாயின்போதான அதிகூடிய இரத்தப்போக்கு என்றும் கூறுகின்றனர். மிகச் சிலரே உண்மையான சம்பவத்தைக் கூறுகின்றனர்.

கருக்கலைப்பிற்குச் சட்ட மறுப்பும், அதை மீறுமிடத்துத் தண்டனையும் கொண்ட நாடுகளில் உள்ளவர்கள் கறுப்புச் சந்தையில் கிடைக்கும் வயிற்றுப் புண்ணுக்குப் பாவிக்கப்படும் மருந்துகளைக் கருப் பையினுள் செலுத்துவதன்மூலம் கருவைக் கலைக்க முயல்கிறார்கள். அத்துடன் வறுமைப் பகுதிகளில் வாழும் பெண்கள் பாதுகாப்பற்ற கருக் கலைப்பினால் இரத்தப்போக்கில் அவதிப்படும் அதேவேளை, பணவசதி கொண்டவர்கள் இரகசியமாகப் பாதுகாப்பான மருத்துவ மனைகளில் கருக்கலைப்பை அதிகூடிய பணத்தைச் செலுத்தி செய்துகொள்கிறார்கள். இவ்வருமானம் ஏறத்தாள இவ்வாறான உயர்ந்த எண்ணிக்கைக் கருக்கலைப்புக்களைக் கொண்ட வளர்முக நாடுகளின் சராசரி மாத வருமானத்தின் 5 மடங்குகளாகும்.



**70 000 பெண்கள் பாதுகாப்பற்ற கருக் கலைப்பினால் மரணிக்கிறார்கள். அமெரிக்க கருக்கலைப்பிற்கு எதிரான கொள்கையே இவ்வெண்ணிக்கை உயர்வுக்குக் காரணமாகும்.**

அதிகூடிய மரணங்களும், ஆபத்துக்களும் கருக்கலைப்பிற்குத் தடை விதித்திருக்கும் அல்லது கடுமையான கட்டுப்பாடுகளைக் கொண்டிருக்கும் கென்யா போன்ற நாடுகளிலேயே காணப்படுகின்றன. இங்கு 30% - 50% ஆன தாய்மார்களின் மரணங்களுக்கான காரணம் பாதுகாப்பற்ற கருக் கலைப்பாகவே இருக்கிறது. பிரேசில் நாட்டில் தாய்மார்களின் இறப்பிற்கான நான்காவது பெரிய காரணமாக இது காணப்படுகின்றது.

2004ம் ஆண்டு ஏறத்தாள 244 000 பெண்கள் பாதுகாப்பற்ற கருக்கலைப்பினால் ஏற்பட்ட சிக்கல்களுக்காக அரசு மருத்துவ மனைகளில் சிகிச்சை பெற்றிருக்கிறார்கள். சுகாதாரத் திணைக்களத்தின் கருத்தின்படி 31% கருத்தரிப்புக்கள் கருக் கலைப்பிலேயே முடிகின்றன. இது வருடாந்தம் ஏறத்தாள 1,4மில்லியன்களாகும். அதிலும் பெரும்பாலானவை சட்ட விரோதமானவை.

உலகம் முழுவதும் தாய்மார்களின் மரணங்களுக்கு இம் மனித விசனகரமான கட்டுப்படுத்தக்கூடிய பாதுகாப்பற்ற கருக்கலைப்பே காரணமாகக் காணப் படுகின்றது. IPPF இன் காரியதரிசியான ஸ்ரீவன்.W. சின்டின் தனது அறிக்கையில் "இது தேசிய அரசமைப்புக்களுக்கும், சர்வதேச சமூகத்திற்கு குறைபாடான தகுதியாகக் காணப்படும் ஒற்றுமைக்கு எதிரான ஒரு மக்கள் சுகாதாரக் கேள்வியாகவே இருக்கிறது" என்றும், "இதனால் நாடுகளுக்கிடையே காணப்படும் மிகப்பெரிய சமூக அநீதியான பணவசதி வித்தியாசத்தை இல்லாமல் செய்வதற்கான ஒரு ஆராய்ச்சியில் ஈடுபடவேண்டும்" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

வறுமையின் விளைவுகளில் ஒன்றுதான் இந்த பாதுகாப்பற்ற கருக்கலைப்புக்கள் என்பதை IPPF உறுதியாக சொல்கின்றது. ஐக்கிய நாடுகள் சபையின் ஆயிரமாண்டுத் திட்டத்திற்கமைவாக இந்தப் பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும். இந்தத் திட்டங்களில் தாய்மார்களின் சுகாதாரத்தைப் பேணுதல், குழந்தைகள் இறப்பு வீதத்தைக் குறைத்தல், வறுமையைக் குறைத்தல், பெண்களின் உரிமைகளை உறுதி செய்தல் என்பன உள்ளடக்கப் பட்டுள்ளன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிறு சோடிப் பாதங்களுக்கு ஒரு சலங்கை

சிவந்த
உன் சிறுசோடிப் பாதங்களில்
சூட்டும் சலங்கையில் கோர்ப்பதற்குகந்த
முத்துப்பரல்கள் சில
சேர்த்துள்ளேன் என் செல்ல மகளே!

இறந்த காலத்தில்
நான் நடந்த பாதைகளில்
சேர்த்திருந்த அனுபவ முத்துக்கள்.....
அவை
உன் தாய் வசித்திருந்த தேசத்தின்
ஓராயிரம் கதை சொல்லும்.

மென்தென்றல் பற்றி
மிக அழகு சொரிகின்ற
பொன்வெயில் படர்ந்த மண்பற்றி
மிதிக்க மனமொப்பா
வெண்மணல் வெளிகள்பற்றி
விரைந்து நீளும் வேனில் பற்றி
கண் துஞ்சா வீரர் போல்
கருநிறத்தில் மிளிர்ந்திருந்த
பெண் ஆண் பனைகள் பற்றி
பின்னொருநாள் கொடும் போரில்
தம் வடலிப் பிள்ளைகளோடு
தடமற்றும் தலையற்றும்
அவையழிந்த சேதி பற்றி
இடம் பெயர்ந்த எம்வாழ்வின்
அவலம் பற்றி
இருப்பிழந்த பின்னாலும்
எம் உரித்தாயிருந்த
நீயறியாச் சொல்லான
'சுயம்' பற்றி

நீள்நெடுங் காலமாய்
நம்மண் தாகித்திருந்த
சுதந்திர வாழ்வு பற்றி
சுனாமி எனும் பெயரில்
உயிர் குடித்த கடல் பற்றியென
சகலமும் உன்னிடத்தில் சொல்லும்.

முத்துப் பரல் பொதிந்த
அச்சிறு சலங்கை
வெண்பனி கொட்டும்
இத்தேச வாசியான
உனது காலுறைகளுள்
மிருதுவாய் வசிக்குமெனும்
கனவெனது.

வெளித்தெரியாத படியெனினும்
என்தேச உணர்வொற்றி
நீ வாழ வேண்டுமெனும்
நினைப்பெனது.

ஆயினும் ஒருவேளை
ஒளி தெறிக்கும் இச் சலங்கை
உன் வாழ்வின் போக்கிற்கு
இசையாதது கருதி
ஓரமாய் வீசப்படலாமெனும்
பயமுமெனது.
எது வெல்லும்?
என் செல்ல மகளே
உன் அன்புத் தாயின்
கனவா? பயமா?

-சாரங்கா தயாநந்தன் **Cambridge-**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தாலி கட்டாத தாமரை

-திலகபாமா-



அடிக்கின்ற கோடையில்
காலியானது குளம்
தாங்காத தாகத்தால்
இலைகள் உதிர்த்த போதும்
கலங்காது நின்ற கரையோர ஆல்

வற்றிப்போன குளத்தில்
புதைந்து கொண்ட தாமரைகளை
மலர்வித்ததாய்
இதுவரை பெருமை பேசிய சூரியன்
காலையிலிருந்து மாலைவரை
வெவ்வேறு திசையிருந்து
ஒளி வீசியும்
இல்லாத தாமரை
மலராதது கண்டு
வெட்கி தொலைந்து போனது

போன பருவம் இருந்திருந்த
அதே நீரல்ல
இந்த பருவத்தில் நிறையப் போகும் நீர்
அடுத்த பருவத்தில் இல்லாது போகலாம்

மாறிய நீரின் போதும்
நீர்களின் குளிருக்காக மட்டும் உயிர்த்து
காதலுக்கும் கற்புக்கும்
புதிய சட்டங்கள் பூட்டிப் போகும்
நிறமற்றிருந்த நீருக்கு நடுவில்
பச்சை இலைகளுக்கு இடையில்
செந்நிறத்தில் பூத்து எரிக்கும் தாமரை

தண்ணீரொடு தாலி கட்டிக்கொள்ளாத
தாமரைகள்
புதிய வேர்களையும்
புதிய மொட்டுக்களையும்
பிரசவித்துக் கொண்ட போதும்
தன்னை உயிர்ப்பிக்கும்
எல்லா பருவத்து நீர்களோடும்
கலந்து கொள்கின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உண்மைகள்!




## பெண்கள் மீதான வன்முறைகள் பற்றிய அதாரபூர்வமான குறிப்புக்கள் சில!

தகவல் தொகுப்பு: ஆர்த்தி

- உலகம் முழுமையுமுள்ள மூன்றில் ஒருபகுதி பெண்கள் வன்முறைக்கு ஆளாகின்றனர்.

- ஏறத்தாள நான்கில் ஒரு பகுதி பெண்கள் தங்களது சொந்த வீடுகளிலேயே வன்முறையை அனுபவிக்கின்றனர்.

- கைத்தொழில் நாடுகளில் 19வீதமான பெண்கள் ஆண்களது வன்முறை காரணமாக உடல்நலக் கேட்டுக்கு ஆளாகின்றனர்.

- உலகம் முழுவதிலும் பெண்கள் காயப் படுத்தப் படுவதற்கும், இறப்பதற்கும் அவரவர் சொந்த வீடுகளில் நிகழ்கின்ற வன்முறைகளே பிரதான காரணியாகின்றது.

- வருடத்தில் 5000 பெண்களும், இளம் பெண்களும் சொந்தக் குடும்பத்தினராலேயே புனிதக்கொலை என்ற பெயரில் படுகொலை செய்யப் படுகிறார்கள்.

- 40 லட்சம் பெண்கள் திருமணத்திற்காகவோ, அல்லது பால்வினைத் தொழிலுக்காகவோ விற்பனை செய்யப்பட்டும், வாங்கப்பட்டுமுள்ளார்கள்.

- ஏழு லட்சம் பெண்கள் உள்ளூர் பால்வினைத்தொழிற் சந்தையில் விற்கப்படுகின்றார்கள். இவர்களிற் பலர் நோர்வேயிலும் பால்வினைத் தொழிலாளர்களாக கொண்டு வரப்பட்டுள்ளார்கள்.

- ஐக்கிய நாடுகள் சபையின் மக்கள் அறிக்கை-2000த்தின்படி ஏறத்தாள 20லட்சம் பெண்கள் பால் உறுப்புக்கள் சிதைவுக்கு ஆளாகின்றனர்.

- நோர்வேயில் பாலியல் வல்லுறவு வெளிச்சத்துக்கு அதிகம் கொண்டுவரப்படாத குற்றமாகவுள்ளது. முறையீடுகள் செய்யப்பட்ட பாலியல் வல்லுறவுக் குற்றங்களைவிட, முறையீடு செய்யப்படாதவை ஐம்பது மடங்கு அதிகமானதென அறிக்கைகள் கூறுகின்றன.

- நோர்வேயில் ஒவ்வொரு வருடமும் 8000 - 9000 வரை பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு ஆளாகின்றனர். முறைப்பாடுகள் செய்யப்பட்ட சம்பவங்களில் 6.5 வீதமானவர்களே 2001இல் தண்டனை பெற்றனர்.

- சமூகத்தில் சாதாரண பெண்களைவிட, மனநிலை பாதிக்கப்பட்ட பெண்களே அதிகளவில் பாலியல் வன்முறைக்கு ஆளாகின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒளியோவியம்: இலக்கியா (12)


Date and Time : 06/03/2006, 12:44:00
Exposure Time : 1/2000 Sec
Aperture : 5.6


# Radio Tamil Ålesund

பூவுக்குப் பூவாய் அலைந்து திரிந்து தேனைச் சேகரிக்கும் வண்டினம்போல்
எமது உறவுகள் உங்களுக்காக தேடிச் சேகரித்த அறிவுசார் நிகழ்வுகளோடு
பிரதி சனிக்கிழமைகளில் மாலை 6மணியிலிருந்து 7மணிவரை
FM 101, 105 அலைவரிசைகளில்
உங்கள் வாசல்தேடி வானலைகளில் வருகிறோம்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உயிர்மெய்

பெண்கள் காலாண்டிதழ்

## ந திரைக்கதை

சிறிய மரப்படகு
நமில்லாத வெறும்படகு
கமாய் வந்து கரைதட்டி நிற்கிறது.
நடைய வருகைக்காகவோ காத்திருப்பதாய்
ரயில் தனித்துக் கிடக்கிறது.
றலைகள் வந்து
னம் விசாரித்தவிட்டுப் போகின்றன.
ரையுமே காணோம்.
தொடுமிடம்வரை தேடுகிறது (கமறா வழியாக)
நம் வரக் காணோம்.
தி சாயும் பொழுதில் கடல் சிவப்பாகிறது
வானில் சரிந்துசெல்லலும் ஆதவன்
ின் வயிற்றில் இறங்குவது போன்ற மாயை.
ய மட்டும்தான், நிசமல்ல.
றன்பின் ஒன்றாக இரு காவாய்ப் பறவைகள்
ியபடியே வந்து
ில் தங்கிக் கொள்கின்றன.
லொன்றைச் சுமந்த மகிழ்வோடு
ந கரைவிட்டகல்கிறது.
மங்கிக் கொண்டிருக்கும் வானுக்கும்
ுக்குமிடையே விரைந்து செல்கிறது
லோடு சிறுபடகு.
ம்படம் நிறைவுற்றது.

-தமயந்தி-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்